# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 15 திங்கட்கிழமை (01-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 291


## பதவிக்கு வந்தால் சந்திரிகாவின் உதவி இன்றியே பிரச்சினைக்கு தீர்வு

### ரணில் கூறுகிறார்

கொழும்பு, நவ. 1

'இனப்பிரச்சினைக்கு தீர்வு [கா]ண ஜனாதிபதி என்னிடம் [உ]தவி கோருகிறார். நான் ஆட்சிக்கு வந்தால் அவரின் உதவியின்றியே இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பேன்'

இப்படி ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபைக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற ஐ.தே.கவின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு மேலும் கூறியதாவது:-

பாதுகாப்பு என்ற பெயரில் கொழும்பில் எங்கும் சோதனைச் சாவடிகள் அமைக்கப் பட்டுள்ளன. இதனால் மக்கள் படும் துன்பங்கள் அளவிட முடியாதவை நான் ஆட்சிக்கு வந்ததும் இந்தச் சோதனை நிலையங்களை உடன் அகற்றிவிடுவேன்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் வியம்பொக்ஸ் உடன்படிக்கையின்படி விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பேன். விடுதலைப் புலிகளும் தமிழ்மக்களும் ஏற்கக் கூடிய தீர்வுத்திட்டம் ஒன்றின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சி எடுப்பேன் என்றார் (இ-3-7-150)

## தொண்டாவின் இறுதிக்கிரியை வியாழனன்று இடம்பெறும்

### தேசிய துக்கதினம் அனுஷ்டிக்க முடிவு

கொழும்பு, நவ. 1

நேற்று முன்தினம் இரவு காலமான இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமானின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் பூரண அரச மரியாதைகளுடன் நடைபெறவிருக்கின்றன.

நேற்று மாலை வரை கொழும்பில் உள்ள மலர்ச்சாலை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த தொண்டமானின் பூதவுடலுக்கு ஏராளமானவர்கள் அஞ்சலி செலுத்தினர்

அதன் பின்னர் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பூதவுடல் நுவரெலியாவில் உள்ள அவரது வெலங்கின் தோட்ட பங்களாவில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

சுமார் 15 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் கியூவில் காத்துநின்று அஞ்சலி

[12 ஆம் பக்கம் பார்க்க]

## அடுத்த ஆண்டு ஒகஸ்டில் நாடாளுமன்றத் தேர்தல்

### ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 1

'ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தவிருக்கின்றோம்' என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அங்கு மேலும் பேசுகையில்:

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குப் பலம் தற்சமயம் இல்லை. அந்தப் பலத்தைப் பெற்றுத் தீர்வைக் காண வசதியாகவே நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்தத் திட்டமிட்டுள்ளோம் — என்றார்.

(இ-3-150)

## [ப]ல்கலை மாணவர் பகிஷ்கரிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ்.பல்கலைக்கழக கலைப் [பீ]ட மாணவன் செல்வநாயகம் சுகந்தனை விடுதலை செய்யக்கோரிக் கடந்த புதன் [கி]ழமை முதல் தாம் நடத்தி வந்த பகிஷ்கரிப்புப் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

மேற்படி மாணவனின் விடுதலை தொடர்பாக சட்டமா அதிபருடனும் ஜனாதிபதியுடனும் துணைவேந்தர் தொடர்புகொண்டுள்ளார் என்றும்—

மாணவனின் கல்வி மற்றும் பரீட்சை, அவரது விடுதலை தொடர்பாக மாணவர் ஒன்றியத்தினால் சட்டமா அதிபருக்கும் ஜனாதிபதிக்கும் மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் அமைப்பைச் சேர்ந்த முன்னாள்ராணுவதளபதிகைது

கொழும்பு, நவ. 1

கடந்த இரு மாதங்களாகத் தேடப்பட்டுவந்த புளொட் அமைப்பின் முன்னாள் இராணுவத் தளபதி [ரா]ஜகன் நேற்று நீர்கொழும்[பி]ல் வைத்துக் கைது செய்[ய]ப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

வவுனியாவிலிருந்து தமது [கு]டும்பத்துடன் தப்பிச் [செ]ன்ற இவர் நீர்கொழும்பில் ஒளித்து இருந்தார் என்றும்—

நேற்றுப் பகல் அங்கு வந்த பொலீஸார் அவரைக் கைது செய்து சென்றனர் என்றும் — அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

இவர் கைதான விடயம் தொடர்பாக பொலீஸ் பிரிவுடனும் புளொட் அமைப்பினருடனும் தொடர்பு கொண்டதாகவும்—

(11 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றவாளிகள் நால்வருக்கும் கருணை காட்டக் கோரிக்கை

### ஜனாதிபதிக்கு மகஜர்கள்

சென்னை, நவ. 1

ராஜீவ் கொலை வழக்குக் குற்றவாளிகள் நால்வருக்கும் விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றக் கருணை காட்டுமாறு தமிழகத்தில் உள்ள பல அரசியல் கட்சிகள் ஜனாதிபதியைக் கோரியுள்ளன.

அகாலிதள், ஆர். எஸ். பி அமைப்பு மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

இதே கோரிக்கையை வலியுறுத்தி சென்னை உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அம்பகாமம் பகுதியில் நேற்று கடும்சண்டை

## இருதரப்புக்கும் இழப்புகள்என தகவல்

வவுனியா, நவம்பர் 1

வன்னியில் அம்பகாமம் கிழக்குப் பகுதியில் படையினர் மேற்கொண்டுள்ள நகர்வை தடுக்கும் வகையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆட்லறி தாக்குதல்களைத் அடுத்து அங்கு நேற்றுக் கடும் சண்டை மூண்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சண்டையில் இருதரப்புக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

அம்பகாமம் கிழக்குப் பகுதியில் விமானப்படை, பீரங்கிப்படை ஆகியவற்றின் உதவியுடன் படையினர் நேற்று முன்தினம் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தனர்.

இந்த படை நகர்வை தடுக்கும் வகையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள ஆட்லறித் தாக்குதலை அடுத்து கடும்சண்டை இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது ஐந்து படையினர் உயிரிழந்தனர் என்றும்—

விடுதலைப் புலிகள் தரப்பில் 50க்கு மேற்பட்டவர்கள்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## 2 படையினர் உயிரிழப்பு எழுவர் காயம்

மட்டக்களப்பு, நவ. 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் கதிரவெளி இராணுவ முகாமில் இருந்து ரோந்து சென்ற படையினரை வாகரைபால்சேனை என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்கியதில் இரு படையினர் உயிரிழந்தனர்; ஏழு படையினர் காயம் அடைந்தனர்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சிக்கி பொதுமகன் ஒருவரும் உயிரிழந்தார் (இ-3-21)

## பாண்டியன்குளம், மாந்தை பகுதிகளில் கிபிர் தாக்குதல்

மன்னார் மாவட்டத்தில் பாண்டியன்குளம், மாந்தை மேற்கு ஆகிய பகுதிகளில் நேற்று குண்டு வீச்சுக்களும், ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன என தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக அந்தப் பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வருவதாகவும் கூறப்பட்டது.

நேற்றுக் காலையும், நண்பகலும் அந்தப் பிரதேசத்தை வட்டமிட்ட கிபிர் விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்தன என்றும்—

பொதுமக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் கிடைக்கவில்லை என்றும்—கூறப்பட்டது. (இ-3-164)

## சிறைச்சாலைக் கூரை மீது ஏறி புளொட் கைதிகள் போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 1

பிணையில் விடுதலை செய் அல்லது விசாரணை செய் என்ற கோரிக்கையை முன்வைத்து யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் புளொட் அமைப்பைச் சேர்ந்த 4 கைதிகள் நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் சிறைச்சாலைக் கூரை மீது ஏறி அமர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கே. சுதாகரன், எஸ். ஜெயச்சந்திரன், கே. பத்மகுமார், எஸ். உமேஸ்கோபு ஆகிய 4 பேருமே நேற்று மேற்படி கோரிக்கையை முன்வைத்து உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தங்களை விசாரணை செய்யாது தொடர்ந்து தடுத்து வைத்திருப்பதாகவும்—

இதேவேளை கற்பழிப்பு மற்றும் கொலைக் குற்றங்களுக்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

இதனாலேயே தாங்கள் உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும்—அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒகஸ்ட் மாதமும் இதே போன்று (படைகளைச் சேர்ந்த ஏனைய 7 கைதி

[12 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி இணைப்புத்தரக் கோரிக்கை

சண்டிலிப்பாய், நவ. 1
தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்கு இதுவரை தொலைபேசி இணைப்பு வழங்கப்படவில்லை.

இவ் வைத்தியசாலைக்குத் தொலைபேசி இணைப்பை வழங்கி உதவுமாறு வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர். எஸ். சிவராணி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கடித மூலம் கேட்டுள்ளார்.

(ஐ-531)

# முறைசாராக் கல்வி பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், நவ. 1
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடத்தப்பட்ட முறைசாராக் கல்வி நெறியின் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்தப் பரீடசை முடிவுகளை கல்லூரி அலுவலகத்தில் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது (க)

★ ★ ★

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப்பிரிவில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட உடையமைத்தல் பயிற்சி நெறியின் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

பாடசாலை நேரத்தில் மேற்படி பரீட்சை முடிவுகளைப் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# கண்காட்சி

வலிகாமம் தெற்கு, நவ. 1
தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (யாழ் புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டம்) அனுசரணையுடன் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் நடைமுறைப்படுத்திய ஆடை தையல் பயிற்சி நெறியின் நிறைவு விழா கண்காட்சி இன்று திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

உடுவில்—மானிப்பாய் வீதியில் 5 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள 'தயாளின்' இல்லத்தில் கண்காட்சி இடம் பெறும்.

இளைஞர் சேவை அலுவலர் சு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வலி—தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-152)

# யுனெஸ்கோ போட்டிகள்

வலிகாமம் தெற்கு, நவ. 1
'யுனெஸ்கோ' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சித்திரம், கவிதை, கட்டுரை ஆகியவற்றுக்கான போட்டிகள் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெற உள்ளன.

[ஐ-152-69]

# யோகர் சுவாமிகள் ஆயிலிய பூசை

கொழும்புத்துறை, நவ. 1
கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் ஆயிலிய நட்சத்திரதின பூசைசுவாமி சமாதிக் கோயிலில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும்.

இந் நிகழ்வில் சுவாமிகளின் நற்சிந்தனை, பஜனை, கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள் என்பனவும் இடம் பெறும். [ஐ-30]

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 1
நல்லூர் ஸ்ரீ காந்தசாமி கோயில் தேரடியில் அமைந்திருக்கும் அறுபத்து மூவர் குரு பூசை மடத்தில் இன்று திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் ஆயிலிய நட்சத்திரத்தை முன்னிட்டு பஜனை, கூட்டுப் பிரார்த்தனை, யோகர் நற்சிந்தனை விசேட பூசை ஆகியன இடம் பெறும்.

நண்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறும். [ஐ-30]

# வன்னியில் மக்கள் இடம் பெயர்வு

மன்னார், நவ. 1
முல்லைத்தீவுப் பகுதியில் தற்போது இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் அகோர ஷெல் தாக்குதல்கள் காரணமாக பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து பள்ளிமுனை இறங்குதுறையை அடைந்துள்ளனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த மல்லாவி, ஜெயபுரம், புதுக்குடியிருப்பு போன்ற இடங்களிலிருந்து 72 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் நூறு பேர் வரை 6 படகுகளில் பள்ளி முனையைச் சென்றடைந்துள்ளனர்.

மன்னார் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு சில தினங்களாக எதுவித உலர் உணவுகளோ வேறு எதுவித வசதிகளோ வழங்கப்படவில்லையென இடம் பெயர்ந்தோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது விடயம் தொர்டர்பாக வை. எம். சி. ஏ. நிர்வாகிகள் அப்பகுதி கிராம சேவகர் ஊடாக மன்னார் உதவி அரச அதிபர் செல்வி எஸ். கணபதிப்பிள்ளையிடம் முறையிட்டுள்ளனர். (இ-6)

# யாழ். செயலகப் பகுதியில் தரகர்களால் தொல்லை

யாழ்ப்பாணம், நவ. 1
யாழ். செயலகத்தில் வாகனப் பதிவுச் சான்றிதழ் மற்றும் பிறப்பு இறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுத் தருவதாகக் கூறிச் செயலகத்துக்கு வரும் பொதுமக்களிடம் பணம் கறக்கும் தரகர்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

செயலகப் பகுதியில் உலாவும் இவர்கள் வாகனங்களைப் பதிய மற்றும் பிறப்பு இறப்புப் பத்திரங்களைப் பெறுவதற்காக வரும் பொதுமக்களிடம் இலகுவாகவும் விரைவாகவும் அவற்றைப் பெற்றுத் தருவதாகக் கூறி அவர்களிடமிருந்து பணம் வாங்கிவிட்டு அவர்களை ஏமாற்றுவதாகவும் இவர்களின் செயற்பாட்டுக்கு செயலகத்தில் கடமையாற்றும் ஒரு சில ஊழியர்களும் உடந்தையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

செயலகத்துக்கு வெளியே அமைந்திருந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திலேயே ஆரம்பத்தில் தரகர்களின் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டதாகவும்—

அதைத் தொடர்ந்து செயலக அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக அந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அகற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இருந்தும் தரகர்களின் தொல்லை குறையவில்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

தரகர்களின் தொல்லைகள் தொடர்பாக செயலக அதிகாரிகளால் பொலீஸாருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதாகவும்—

அவர்கள் இது தொடர்பாக இதுவரை எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# கணனிப் பயிற்சிகள் விரைவில் ஆரம்பம்

வலி. தென்மேற்கு, நவ. 1
வடக்கு—கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித்திணைக்களத்தினால் கணனிப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புகள் யாழ்ப்பாணத்தில் உள்ள உயர்கல்வி நிறுவனம் ஒன்றின் ஊடாகவே கற்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும்—

அரசாங்கத் திணைக்களங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்டத்தில் இருந்து இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் எனவும்—

மேற்படி கணனிப் பயிற்சி வகுப்புகள் 6 துறைகளில் நடத்தப்படும் எனவும்—

இது தொடர்பாகத் தகவல் வெளியிட்ட முகாமைகள் பயிற்சிப் பணிப்பாளர் எம். ஏ. ஸி. மொஹிதீன் தெரிவித்தார். (ஐ-8-185)

# திட்டங்களைப் பார்வையிட ஐ. நா. அதிகாரிகள் வருகை

யாழ். குடாநாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதியின் பயன்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஐ. நா. தலைமையகத்தில் இருந்து குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளது.

நான்கு பேர் அடங்கிய இந்தக்குழுவில் பசிம் கே ஹாதர், வீ. புலேந்திரன், ரீ. மாரு. டெய்ட்ரா போயா ஆகிய அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.

இவர்கள் ஐ.நா. அபிவிருத்தித்திட்டத்தின் மூலம் குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கென வழங்கப்பட்ட நிதி உரிய முறையில் அபிவிருத்திப் பணிகளுக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக ஆராயவுள்ளனர்.

இதே வேளை—

சுமார் ஒரு வார காலம் இங்கு தங்கியிருக்கும் இவர்கள் குடாநாட்டின் பல இடங்களுக்கும் விஜயம் செய்து இங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்வர்.

அத்துடன் இங்குள்ள உள்நாட்டு வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு, நேரில் சென்றும் இங்குள்ள மக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள் மற்றும் நிலைவரங்கள் என்பன தொடர்பாகக் கேட்டு அறிந்தும் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 3 ஆம் திகதி இவர்கள் இங்கிருந்து புறப்பட்டுச் செல்வர்.

(ஐ—9)

# மரண அறிவித்தல்கள்

## அப்பையா குலசேகரம்பிள்ளை
(குலம்)

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அப்பையா குலசேகரம்பிள்ளை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மா (சிறி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அப்பையா முத்தம்மா அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகனாதி செங்கமலம் ஆகியோரின் மருமகனும் கோகிலராணி, மனோன்மணி, ஜெயராணி, அருள்தாஸ் (கனடா), ஜெயதாஸ் (கனடா), குகதாஸ், வனீசியா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரத்தினம், மகேஸ்வரி, காலஞ்சென்ற வடிவேலு, நாகேஸ்வரன், இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் யோகம்மா, கமலாசினி, சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான சந்திரமதி, ரவீந்திரன், கோணேஸ்வரன் மற்றும் நாகேஸ்வரன், விக்கினேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் இளங்கீரன், கேதீஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும் யுதர்னா, லக்ஷாயினி, அஜந்தன், தர்சிகா, லக்சிதா, டெனிசியா, கஜீபன், கபில்வேந்தன், கஸ்தூரி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில் 31-10-99 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
கே. இளங்கீரன்
(மருமகன்)

149, கோயில் வீதி,
நல்லூர்.

(70575)

## வடிவேலு லோகநாதன் (லோகன்)
(இளவாலை யங்ஹென்றீசியன் வி. க. உதைபந்தாட்ட வீரன்)

மாவிலங்காடு கூவில் கீரிமலையைப் பிறப்பிடமாகவும், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு லோகநாதன் அவர்கள் 31-10-99 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வடிவேலு (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை ஊழியர்) — செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் ராமேஸ்வரி (தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்,) தில்லைநடராசா, சர்வேஸ்வரி, (யா/, இளவாலை கன்னியர் மட மகாவித்தியாலய மாணவி), கிருஷ்ணகுமார் (யா/புனித ஹென்றி அரசர் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-11-99) அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நண்பர்கள்
(யங் ஹென்றீசியன் வி. க.)

கல்லூரி வீதி,
இளவாலை.

(70582)

லிபேட்டி அச்சுவேலி
சரத்குமார்
நடித்த
நேதாஜி
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223
070 - 212678
(70541)

ராஜா
யாழ்ப்பாணம்
கார்த்திக் - நக்மா
மற்றும் பலர் நடித்த
மேட்டுக்குடி
10-30, 2-30
(சி/9530)

நாகம்ஸ்
சுன்னாகம்
அர்ஜுன், குஷ்பு
ராதாரவி, வடிவேலு
நடித்த
ரோஜாவைக் கிள்ளாதே
காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(70562)

# சேவைக்கால பயிற்சி

வலிகாமம் தெற்கு, நவ. 1
'சீடா' நிறுவன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாடசாலை அதிபர்களுக்கான சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கும்செயலமர்வும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது. (ஐ-152)

# நூலகத்தைச் சுற்றி வேலி

அரியாலை, நவ. 1
யாழ். மத்திய நூல் நிலையத்தை புனரமைப்புக்கு முன்னோடியாக நூல் நிலையத்தைச் சுற்றி தகரத்தினாலான பாதுகாப்பு வேலிகள்போடப்பட்டுள்ளன. அத்துடன் கட்டட புனரமைப்புப் பணிகளைச் செய்யவுள்ள தொழிலாளர்கள் தங்குவதற்கென பெரிய அளவிலான தகரக் கொட்டகை ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-17)

# மெலிஞ்சிமுனையில் 44 வீடுகள் அமைப்பு

நெடுந்தீவு, நவ. 1
வீடமைப்புத் திணைக்களம் வழங்கும் கடன் உதவியுடன், வீடமைக்கும் திட்டத்தின் கீழ் ஊர்காவற்றுறை மெலிஞ்சி முனையில் 44 வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாக கரம்பொன் கிராம அலுவலர் எஸ். கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

(ஐ-8-111)

# கடன் அடிப்படையில் மீனவருக்கு வலைகள்

சண்டிலிப்பாய், நவ. 1
சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள் 50 பேருக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரக நுண்கருத் திட்டத்தின் கீழ் சுழற்சி முறையிலான கடனடிப்படையில் மீன்பிடி வலைகள், கடற்றொழில் உபகரணங்கள் என்பன விரைவில் வழங்கப்படவுள்ளன.

இதற்கென அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் ஐந்து லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-135]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 515 தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், நவ. 1 காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 515 பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவை யாவும் தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

(ஐ-9-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யாழ். பண்டத்தரிப்பு மகளிர் உயர் தரப் பாடசாலை

மோ. கேமாவதி – 135
தி. பிரணவன் – 129
யோ. சுமன் – 119

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இம் மாணவர்களை சித்திபெற அயராது ஊக்குவித்துக் கற்பித்த ஆசிரியர் திரு. தி. தீபன் அவர்களையும் மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.

யா/ பண்டத்தரிப்பு
மகளிர் உயர் தரப் பாடசாலை.

[70534]



## கண்ணீர் அஞ்சலி

அமரர்
### சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன்

வலி.வடக்குப் பிரதேசசபைத் தலைவரும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமாகிய திரு சு. ஸ்ரீபாஸ்கரன் அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பா. அ. சங்கம், ப. மா. சங்கம்
யா / மல்லாகம கனிஷ்ட வித்தியாலயம்.

(70559)



உ

## ஆத்ம சாந்திக்கிரியை அழைப்பு

அன்புடையீர்!
24 – 10 – 99 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தாயார்

### ஸ்ரீ. கி. இரத்தினம்மா

அவர்களின் ஆன்ம சாந்தி குறித்து கிரியைகள்
ஐப்பசி மாதம் 16 ஆம் நாள் (2 – 11 – 99)
செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தசாகமும்
ஐப்பசி மாதம் 19ஆம் நாள் (5 – 11 – 99)
வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு
கிருஹயக்ஞம், சமாராதனையும் நடைபெறும்.

இக்காலங்களில் தாங்கள் சமூகம் தந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

கி சோமசுந்தரக் குருக்கள்
கி. சதாசிவசர்மா

'கீதாலயம்'
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(70556)



## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 07 — 1941
மறைவு: 02 — 10 — 1999

### சின்னத்துரை சிவசுப்பிரமணியம்

[கொழும்பு மாநகரசபை வரிமதிப்பீட்டாளர்]
அன்றில் பறவையென அன்பிணைந்து வாழ்ந்தோம்
இன்பக் குலவிளக்காய் ஒளிதந்தவரே!
உங்கள் பிரிவுதனை பொறுத்தறியோம்.
என்றென்றும் உங்கள் நினைவுகள் எமை விட்டகலா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும்
இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

பாரதி வீதி,
நல்லூர் தெற்கு.

—குடும்பத்தினர்
[70545]


## நகரில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், நவ. 1
யாழ். நகரில் காங்கேசன்துறை வீதிப்பகுதியில் வீடியோக் கடை ஒன்றில் வேலை செய்து வரும் இளைஞன் ஒருவன் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவரின் உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். காங்கேசன்துறை வீதியைச்சேர்ந்தசகாதேவன் பாஸ்கரன் (வயது 21) என்ற இளைஞரே கடந்த வெள்ளிக்கிழமை பிரஸ்தாப வீடியோக் கடையில் வைத்து அங்கு வந்த படையினரால் கைதுசெய்யபட்டதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை.—

குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த குடும்பப்பெண்ஒருவர் காணாமல் போயுள்ளதாக அவரது கணவனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்கரை வீதி,குருநகரைச் சேர்ந்த அல்பேட் அமராவதி (வயது 43) என்ற பெண்ணே கடந்த திங்கட்கிழமை தொடக்கம் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9-10)

## பொது நிர்வாக பட்டப் பின்படிப்பு

வலி.தென் மேற்கு, நவ.1
யாழ். பல்கலைக் கழகத்தில் பொது நிர்வாகப் பட்டப் பின் டிப்ளோமா கற்கை நெறி விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்கு 58 மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொது நிர்வாகப் பட்டப் பின் டிப்ளோமா கற்கை நெறிக்கு அடிப்படை பட்டப் படிப்பில் சிறப்புத்தரம் இருப்பதுடன் சம்பந்தப்பட்ட துறைகளில் வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. (ஐ-185)

## உயிரிழந்த புலி உறுப்பினர்களின் விவரம்

வவுனியா, நவ. 1
கடந்த 28 ஆம் திகதி அம்பகாமம் பகுதியில் சிறீலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் உயிரிழந்த மேலும் மூவரின் பெயர் விவரங்களைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:—

★ சந்திரன் [செல்வராசா ரமேஷ் — கிளிநொச்சி]

★ பாமகன் [செல்லத்துரை சசிகரன் — மன்னார்]

★ திரையாளன் [லச்சுமணன் தர்மராஜா — முல்லைத்தீவு]

தென்மராட்சிப் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற ஒரு மோதலில் லெப். இளங்குமரன் [ஆறுமுகம் சீலன்— கிளிநொச்சி] என்பவரும் —

சுழிபுரம் பகுதியில்ஏற்பட்ட மோதலின்போது கப்டன் விஸ்வநாதன் [சின்னராசா கனகராசா — திருமலை] என்பவரும் —

மன்னார்ப் பகுதியில் இடம் பெற்ற மோதலின் போது மேஜர். குமாரவேல் [சிவக்கொழுந்து இராஜேஸ்வரன் — யாழ்ப்பாணம்] என்பவரும்—

வீரச்சாவடைந்ததாக 'புலிகளின் குரல்' ... தெரிவித்தது.

(ஐ-8-4)


## புலமைப் பரிசில் பரீட்சை-1999

### யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்

மேற்படி வித்தியாலயத்தில் 1999 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன்

**பேரம்பலம் மோகனகாந்தையும்**

அண்மித்த புள்ளி 116 பெற்ற

**ஜெ. சிந்துஜாவையும்**

பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும், வினாப்பத்திரங்களைத் தந்துதவிய கொக்குவில் ராஜா கல்வி நிறுவனத்தாருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சபையினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்

### நதியா நகைமாடம்,

இல. 2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(70450)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

1997 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த

**சே. நிரோஜ், ச. அருண்நேரு,**
**சி. பிரசாந்த்** அவர்களையும்

1998 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த

**சி. பிரண்யா** அவர்களையும்

1999 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த

**சி. கோபிகா, கி. பிரியதர்சன்**
அவர்களையும்

இந்நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவர்களை வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/ கம்பர்மலை அ. த. க. பாடசாலை.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

(70552)



## மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/அனலைதீவு தெற்கு
### அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம்

1999 இல் நடைபெற்ற தரம்–5 புலமைப் பரிசில் பரீட்சையில் 121 அதிகூடிய புள்ளி பெற்று சித்தி எய்திய மாணவன்

**செல்வன் மருதையினான் சிறிடரன்**

அவர்களைப் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

— அத்துடன் பாராட்டுப் பெறும் மாணவர்கள்;

| | | |
|---|---|---|
| செல்வி | மு. ஜெனனி | – 117 புள்ளிகள் |
| செல்வன் | பா. சுஜீதரன் | – 109 ,, |
| செல்வன் | க. சேயோன் | – 107 ,, |
| செல்வி | வை. விமலினி | – 105 ,, |
| செல்வி | சி. நிருபா | – 98 ,, |

இம்மாணவர்களை நெறிப்படுத்திக் கல்வி அமுதூட்டிய அதிபரையும், ஆசிரியர்களையும் மனதாரப் போற்றித் துதிக்கின்றோம்.

இப் பாடசாலை புலமைப் பரிசில் சித்தியில் தொடர்ந்து சாதனை படைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

அபிவிருத்திச் சபை,
யா/அனலைதீவு தெற்கு அ. த. க.
வித்தியாலயம், அனலைதீவு.

(70520)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவிக்கழகு-சேர்

யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் அறிவூட்டுந் திலகங்களில் ஒருவரான

**குமாரசாமிக்குருக்கள் பஞ்சாட்சரசர்மா**

அவர்களை சமாதான நீதிவானாகத் திகழ்ந்து பதவிக் கழகுசேர், எனவும் பதவிக்கழகு 'Sir' எனவும் வாழ்த்தும்.

அதிபர், ஆசிரியர்கள்.

[70524] யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை,


## மலிவு விற்பனை

### வாடிக்கையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

1-11-99 தொடக்கம் 6-11-99 வரை.

சகல புடைவை வகைகளுக்கும் 7½ வீத விசேட விலைக் கழிவு வழங்கப்படும் என்பதை எமது வாடிக் கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/ 9607)

## விநாயகர் புடைவை அகத்தினரின் தீபாவளி

### சிறப்புத் தள்ளுபடி விற்பனை

சாறிவகைகள், பஞ்சாபி சூட்வகைகள் மற்றும் இன்னோரன்ன புடைவைத் தினுசுகளும் சிறப்புத் தள்ளுபடி விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. வாருங்கள்! வந்து பாருங்கள் சிறப்புத் தள்ளுபடி விலை எப்படியென்று அப்போதுதான் உண்மை புரியும். இந்தச் சலுகை தீபாவளி வரை மட்டுமே. உங்கள் தெரிவிற்கு முந்துங்கள்.

62 A, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

(சி/9461)


# எட்டு முன்பள்ளிகளைச் சேர்ந்த 241 சிறுவர்களுக்கு சத்துணவு

## 54 நாள்கள் வழங்க நடவடிக்கை

வலி. கிழக்கு, நவ. 1

யாழ். மாவட்டத்தில் போசாக்கு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 8 முன்பள்ளிகளைச் சேர்த்து 241 மாணவர்களுக்கு 54 நாள்களுக்கு சத்துணவான பால், முட்டை ஆகியவற்றை வழங்க யாழ். அரச அதிபர் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார் —

இந்தப் போசாக்கு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அச்சுவேலி இளங்கதிர் பாலர் பாடசாலை. நவிண்டில் கரணவாய் மேற்கு கலைமதி பாலர் பாடசாலை, அம்மன் பாலர் பாடசாலை, கொடிகாமம் மந்துவில் கிழக்கு பாலர் பாடசாலை, பன்னசுட்டி சுழிபுரம் காந்தி பாலர் பாடசாலை, கும்பலை அளவெட்டி பாரதி சனசமூக நிலையப் பாலர் பாடசாலை, நயினாதீவு நாவலர் பாலர் பாடசாலை, அனலைதீவு ஐயனார் பாலர் பாடசாலை ஆகிய 8 முன்பள்ளி பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த 241 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்திற்கு 90 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ-180)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 28 – 08 – 1928

மறைவு 02 – 10 – 1999

**அமரர் சுப்பையா நடராசா**

[EY 2745 கார் உரிமையாளர், திருநெல்வேலி]

அப்பா!
நீங்கள் உள்ளபோது எமக்கு இல்லாதது
ஒன்றுமில்லை
நீங்கள் இல்லாத போது எமக்கு ஒன்றுமேயில்லை

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

அமிர்தநாயகம் சாந்தினி
''சாந்தசோலை''
அல்வாய். [70495]

## சமுர்த்தி நியமன நேர்முகப்பரீட்சை

யாழ். பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களை நிரந்தர நியமனம் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

ஜீ.சீ.ஈ. (சாதாரண) தர பரீட்சையில் மூன்று பாடங்கள் திறமைச்சித்தியுடன் 6 பாடங்கள் சித்தியடைந்திருப்பவர்கள்முதலாம்தரசமுர்த்தி உத்தியோகத் தராகவும் இதற்குக் குறைந்த தகைமையுடையோர் இரண்டாம் தர சமுர்த்தி உத்தியோகத்தராகவும் நியமனம் செய்யப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

[ஐ-5]

## பொன்விழா பரிசுத்தினம்

வேலணை, நவ. 1

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய பொன்விழா பரிசுத்தினம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் கு. சணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. பாலச்சந்திரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக தீவக கல்விவலயப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் முன்னாள் அதிபர்கள் எஸ். இராசநாயகம் சி. குணபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன், பேராசிரியர் எஸ். சத்தியசீலன் மற்றும் வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். [ஐ73176

## அபராதம் விதிப்பு


யாழ்ப்பாணம், நவ. 1

சட்டவிரோதமான முறையில் கசிப்பு மற்றும் கோடா என்பனவற்றை வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட மூவருக்கு, பருத்தித்துறை நீதிமன்றம் அபராதம் விதித்தது.

வல்வெட்டித்துறைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட உடுப்பிட்டியைச் சேர்ந்த இந்த மூவரும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோதே நீதிவான் இ. த. விக்னராசா, மூவருக்கும் 31 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

[இ-15]


**மூவ்.**





மூட்டு வலி, முதுகு வலி, வாதம், வீக்கம், தசைப்பிடிப்பு என்பவற்றுக்கான உடனடி நிவாரணி.

**க்ராக் கீரீம்.**




இது பாதங்களில் ஏற்படும் வெடிப்பினால் உண்டாகும் இரத்தக் கசிவு, காயம், எரிச்சல் குணமாக்கி வெடித்த குதிகால்களை அழகாகவும், மென்மையாகவும் செய்கிறது 14 தினங்களில் மட்டுமே

**போரோசொப்ட்**





பிசுபிசுப்பற்றது. கற்றாழைச்சாறு கலந்தது. முகத்தில் பருக்களினால் ஏற்பட்ட காயங்களை குணமாக்கி கரும் புள்ளிகளை அகற்றுகிறது. இதில் அடங்கியுள்ள விசேட மூலிகைகள் பருக்கள் வரவிடாமல் தடுப்பதோடு முகத்தை வெண்மையாக்கி பொலிவடையச் செய்கிறது.

**ஸ்டாப்பேக் க்ரீம்.... பாம்**




இது தலைவலியை நொடியில் பறந்தோடச் செய்கிறது. இதன் பிசுபிசுப்பற்ற தன்மை நெற்றியில் திட்டு திட்டாய் படியாமல் இலகுவில் காய்ந்து தடிமன், உடல் வலிகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கிறது.

**வின்டர் ஷீல்ட்**




சந்தனம், வெஸ்லீன், இயற்கை மூலிகைகள் அடங்கியது. இது சருமத்தை உலர்விலிருந்து பராமரிப்பதோடு மேனியை பொலிவடையச் செய்கிறது. இதில் அடங்கியுள்ள விசேட மூலிகைகள் கரடு முரடான உள்ளங்கைகளை மிருது வாக்குவதோடு, தோல், உதடு வெடிப்பிலிருந்தும் நிவாரணம் தருகிறது.

**டி'கோல்ட் க்ளியர்**



வெது வெதுப்பானது சளி, தடிமன், தொண்டை கரகரப்பு, மூக்கடைப்பு ஆகியவற்றிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

**இட்ச்காட் டெர்மிகூல் பிரிக்லி-ஈட் பவுடர்**




இதன் குழுமையான பார்மியுலா வியர்க்குரு மற்றும் உடல் அரிப்பிலிருந்து பாதுகாப்பதோடு நறுமணத்தையும் தருகிறது.

* பல கோடி இந்திய மக்களின் நம்பிக்கையை வென்றதும், உலகின் 40க்கும் மேற்பட்ட நாடுகளில் சந்தைப்படுத்தப்பட்டுள்ளதுமான "பராஸ்" தயாரிப்புக்கள் சர்வதேச தரம் கொண்டது
* எமது "பராஸ்" ஆயுர்வேத மருத்துவ தயாரிப்புக்களின் சர்வதேச தரத்தை அறிந்து கொள்ள அனைத்து "பராஸ்" தயாரிப்புக்களின் மேலுறைகளில் சர்வதேச வியாபாரக் குறியீடு 8901177200250 மற்றும் உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி அச்சிடப்பட்டுள்ளதா என்று கவனித்து வாங்குங்கள்.

குறிப்பு:- எமது பொருட்களின் அட்டைப் பெட்டியில் சர்வதேச வியாபாரக் குறியீடு பொறிக்கப்பட்டுள்ள பகுதியினை கத்தரித்து கவனமாக சேர்த்து வையுங்கள். அதிகப்படியாக சேர்ப்பவர்களுக்கு மாபெரும் பரிசு மழையின் போட்டி விரைவில் அறிவிக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்:- JEGAN PHARMACY, 462/B, HOSPITAL ROAD, JAFFNA. TEL: 2194.

"பராஸ்" தயாரிப்புக்களை யாழ்ப்பாணம் முழுவதும் உள்ள மருந்தகங்கள், சில்லறை கடைகள், பல்பொருள் வணிக நிலையங்கள் மற்றும் அழகு சாதன கடைகள் என்பவற்றில் பெற்றுக் கொள்ள முடியும்.

இறக்குமதி செய்து விநியோகிப்போர்:- PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.
NO. 629/1, NEGOMBO ROAD, MABOLA, WATTALA.
PHONE:- 01-939167, 074 - 817642, FAX: 01-939167

(சி/9263)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மக்கள் நலன் நாடிய தலைவர்

இலங்கையின் மூத்த அரசியல்வாதியும் மூத்த தொழிற் சங்கவாதியுமான அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமானின் மறைவு பல வகைகளிலும் இடைவெளியைத் தோற்றுவித்துள்ளது. மலையகத் தமிழ் மக்களின் தனிப்பெருந் தலைவராக அவர் விளங்கினார். அதனோடு மட்டுமன்றி பொதுவாகவே தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் துணிச்சல் மிக்க தலைவராகவும் அவர் செயற்பட்டார்.

மலையகத் தமிழ் மக்களின் சமூக, அரசியல், பொருளாதார மேம்பாட்டுக்காக உழைத்துப் பல உரிமைகளைப் பெற்றுக் கொடுத்த பெருமை தொண்டமானுக்கே உரியது. தமது மக்களின் தொழில் மேம்பாட்டுக்காகவும் வாழ்க்கை வசதிக்காகவும் பல தொழிற் சங்கப் போராட்டங்களை நடத்தியவர் அவர். அந்த அத்திவாரத்தில் மலையக மக்களுக்கென ஓர் அரசியல் இயக்கத்தையும் தோற்றுவித்தார். அதன் மூலம் தமது மக்களுக்கென ஓர் அரசியல் அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அவரது அரசியல் சாதுரியமும் ஆற்றலும் மலையக மக்களுக்குப் பல உரிமைகளையும் வசதிகளையும் பெற்றுக் கொடுத்தது. தொழிற்சங்கத் தலைவராக இருந்து போராட்டங்கள் நடத்திய பயிற்சி, எதனையும் போராடிப் பெறும் திறமையை அவருக்குத் தந்தது எனலாம்.

அமரர் தொண்டமானின் அறுபது வருட தொழிற்சங்க, அரசியல் வாழ்க்கையில் அவர் தமது மக்களுக்காகப் பலவற்றை ஈட்டிய சாதனையாளராகவே விளங்கினார். இறக்கும் வரை, 87 வயது வரை அரசியல் தலைமைத்துவத்தை நடத்திய பேராற்றல் எல்லோருக்கும் இயலக்கூடியதல்ல.

அந்த வகையில் அவர் ஒரு தனித்துவம் மிக்க தலைவராகவே திகழ்ந்தார்.

உரிமைகளைப் போராடிப் பெறுவதால் கிடைக்கும் பயன் அவற்றை அனுபவிப்பதிலேயே தங்கியுள்ளது என்ற நம்பிக்கையுள்ளவராக அவர் விளங்கினார். அதனால் கிடைத்த உரிமைகளை உரியவாறு தமது மக்கள் அனுபவிக்கிறார்களா என்று அவதானித்தும் கண்காணித்தும் வந்தார். அதனால் மலையகத் தமிழ்ச் சமூகம் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் இருந்ததை விட கல்வியிலும் ஏனைய துறைகளிலும் பெரியளவில் இப்போது முன்னேறியுள்ளது; மேம்பட்டுள்ளது.

ஒரு தமிழன் என்ற வகையில் இனப்பிரச்சினைக்கு நீதியான அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதனை ஓங்கி ஒலித்தவர் அவர். வடக்கு — கிழக்கின் அரசியல் தலைவர்கள் சிலர் முகம் சுழித்தாலும் யதார்த்தத்தை உணர்ந்து கருத்துக்களை வெளியிட்டு வந்தவர். தமது அரசியல் அனுபவத்தைக் கொண்டு அவர் கூறிய ஆலோசனைகளைச் சிங்களத் தலைமைகள் தக்கவாறு பரிசீலனை செய்யவில்லை.

இனப்பிரச்சினையை இனியும் இழுத்தடித்தலாகாது என்பதனை அழுத்தியும் இடித்தும் உரைத்து வந்தவர். இந்த வேளையில் ஏற்பட்ட அவரது மரணம் ஒரு வகையில் பாதிப்பைத் தரும்.

மூத்த அரசியல்வாதியான அவரது இழப்பு நாட்டுக்குப் பெருநஷ்டம்; வடக்கு – கிழக்கு வாழ் தமிழர்களுக்குப் பாதிப்பு; மலையகத் தமிழர்களுக்கோ ஒளிவிளக்கு ஒன்று அணைந்தது போலாகும்.

அவரைப்போன்ற அரசியல் சாதுரியமும், துணிச்சலும், மக்கள் நலனில் அக்கறையும் உள்ள தலைவர்களை இனிக் காண்பது மிகவும் அரிதாகவே இருக்கும்.

# தமிழரின் கலாசார, பாரம்பரிய, விழுமியங்களை ஒருங்கிணைத்து வெளிப்படுத்திய முத்தமிழ் விழா

பல வழிகளிலும் எமது சமுதாயம் நலிந்து நொந்து போயிருக்கும் காலம் இது. நாம் இழந்துவிட்ட பலவற்றுள் எமது பாரம்பரிய கலை விழுமியங்களும் அடங்கும்.

இவற்றை உறுதியோடு மீட்டெடுத்து எமது எதிர்காலப் பரம்பரையினருக்கு வழங்குவோம் என்பதனை ஒக்ரோபர் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் வலிகாமம் கிழக்குப் பகுதியில் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் நடத்தப்பட்ட மூன்று நாள் முத்தமிழ்விழா கட்டியம் கூறுவதாக அமைந்தது.

நாம் போற்றி வளர்க்கும் அரிய பண்பாடு அத்தகைய போற்றுதலுக்கேற்ப தமது தோடு கண்டு ரசித்ததைக் காண முடிந்தது.

15 ஆம் திகதி முதல்நாள் முத்தமிழ் விழா அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரியில் கோப்பாய் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தலைமையிலும் —

16 ஆம் திகதி இரண்டாம் நாள் நிகழ்வு உரும்பிராய் கலையரங்கத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் கு. சுந்தரம்பிள்ளை தலைமையிலும்.

17 ஆம் திகதி இறுதி நாள் நிகழ்வு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் கோப்பாய் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தலைமையிலும் —

கவிஞர்கள் போன்றோரையும் இனம் கண்டு உற்சாகம் ஊட்டி கௌரவிப்பதன் மூலம் கலைகளை மேலும் எமது மண்ணில் வளர்க்க முடியும் — என்றார்.

இரண்டாம் நாள் உரும்பிராய் கலையரங்கத்தில் இடம்

### செய்திக் கட்டுரை

பெற்றவிழாவுக்குத் தலைமை வகித்த தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தமதுரையில் —

இப்பிரதேசத்தில் உள்ள கலைஞர்கள் எதிர்காலச் சந்ததியினர் அனைவருக்கும் இக் கலாசாரப் பேரவை ஒரு கலங்கரை விளக்கமாக திகழ

ளுக்கு ஆதரவாக இருந்தவர்களையும் இந்த நேரத்திலே பாராட்ட வேண்டியது எமது கடமையாகும்.

இவ்விழாவில் 'புத்தாயிரம் ஆண்டில் தமிழர் கலாசாரம் பேணப்படுகின்றதா? இல்லையா?' என்ற தலைப்பில் பட்டிமன்றம் ஒன்று புத்தூர் அமுத சுரபி கலாமன்றத்தால் நடத்தப்பட்டது.

#### நூல் வெளியீடு

17 ஆம் திகதி 3ஆம் நாள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் வலி.கிழக்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் முத்தமிழ் விழாமலர் என்னும் நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது.

இந்த நூலினை யாழ். மாவட்ட உதவி அரச அதிபர் து.வைத்திலிங்கம் வெளியிட்டு வைத்ததைத் தொடர்ந்து திருமதி எஸ். கனகரட்ணம் மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவினை ஆற்றிய ஆறு.திருமுருகன் கூறியதாவது:-


இந்த விழாவிலே. அறம் பற்றிய சிந்தனை வளர வேண்டும். அறம் இல்லையேல் அமைதி இல்லை. ஆனந்தத்தைச் சந்திக்க முடியாது

#### காலத்தின் கண்ணாடி

தமிழ் இலக்கிய நூல்கள் காலத்தின் கண்ணாடிகளாகப் பேணப்பட்டு வருகின்றது.

காலத்தை எல்லாம் நம் கண்முன் கொண்டுவந்து நம் முன்னோர் எப்படி வாழ்ந்தார்கள் என்பதற்கு இவ் இலக்கிய நூல்களே சான்றாக உள்ளன — என்றார்.

ஒட்டு மொத்தமாக நோக்கில் யாழ். மாவட்டத்தில் அண்மையில் சங்கானை பிரதேச செயலக கலாசாரப் பேரவையாலும், வலி. கிழக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையாலும் நடத்தப்பட்ட முத்தமிழ் விழாக்கள் போன்று ஏனைய பிரதேச




மூன்று நாள் முத்தமிழ் விழாவின் இறுதி நாளன்று முத்தமிழ் விழா மலரை யாழ். மேலதிக அரச அதிபர் து வைத்திலிங்கம் வெளியிட்டு வைப்பதையும்—
செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் சிறப்புரை ஆற்றுவதையும் படத்தில் காணலாம். (ஐ)

கலை வாழ்வை உயர்த்துவதற்குரிய பண்பு வலிகாமம் கிழக்கு பிரதேசத்திலே நிறையவே இருக்கின்றது என்பதற்கு இம் மூன்று நாள்கள் அணி திரண்டு மண்டபமே நிரம்பி வழியும் மக்கள் வெள்ளம் எடுத்துக்காட்டாக அமைந்தது.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக கலா சாரப் பேரவையினாலும் பொது மக்களாலும் நடத்தப்பட்ட இந்த மூன்று நாள் முத்தமிழ் விழாவில் பாமர மக்கள் தொடக்கம் அறிஞர்கள், கலைஞர்கள், கலை ஆர்வமுள்ளோர்கள் சிறியோர்கள் எனப் பலரும் மிக நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தமிழ் மக்களுக்கே உரித்தான இந்த முத்தமிழ் விழாவை ஆர்வத் இடம்பெற்றது.

மக்கள் வங்கி கன்னாதிட்டி கிளைமுகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் தமது உரையில்:—

#### கலாசார சீரழிவு

தொன்றுதொட்டு வளர்ந்து வந்த நாம் தமிழ் கலை கலாசாரப் பண்புகள் அன்னிய ஆதிக்கத்தினால் சீரழிவு நிலையை அடைந்துள்ளது.

இந்த நிலையை மாற்றி தமிழ்மொழியை வளர்ப்பதோடு எமது கலை, கலாசாரம் போன்றவற்றை பேணவேண்டிய கடைப்பாடு ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உண்டு—

முதிய கலைஞர்களை இப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை கௌரவிக்கும் அதே வேளை இலைமறைகாயாக இருக்கும் கலைஞர்கள், இளம் வேண்டும் — என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் மா. ஆறுமுகம் தமது ரையில் —

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மொழிகளுள் இன்றும் இளமை குன்றாது அழகுடன் நடை போட்டுக் கொண்டிருக்கும்மொழி எமது தமிழ் மொழி

இந்த மொழி வளர்கின்றது என்றால் தமிழை வளர்த்த பெரியார்களையும், அவர்க செயலகங்களும் நடத்துவதன் மூலமே எமது தமிழுக்குரிய கலையும் பண்பாடும போற்றிப் பாதுகாக்கப்படும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ★

தொகுப்பு:-
**பொ. இராஜேஸ்வரன்**
(வலி. கிழக்குச் செய்தியாளர்)

## உயர் தொழில் நுட்ப நிறுவன டிப்ளோமா பரீட்சைகள்

வலிகாமம்தெற்கு, நவ. 1

யாழ்ப்பாணம் உயர்தர தொழில் நுட்ப நிறுவனத்தில் நடைபெற்றுவரும் உயர் தேசிய கணக்கியல், வியாபாரக் கற்கையும் நிதியியலுமான டிப்ளோமா பரீட்சைகள் இம் மாதம் நடைபெற உள்ளன.

இம் மாதம் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 4 ஆம் வருடபரீட்சை [HNDA] யும்.

இம் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை வியாபாரக் கற்கையும் நிதியியலுமான டிப்ளோமா 2 ஆம் வருட பரீட்சை [NDBF] யும்—

நடைபெறும் என யாழ்ப்பாணம் உயர்தர தொழில் நுட்ப நிறுவனத்தினருக்கு பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

[ஐ–152]

## நாளை

ஐப்பசி 16

செவ்வாய்க்கிழமை

திதி: நவமி

முற்பகல் 8.43 வரை.

நட்சத்திரம்: மகம்

பின்னிரவு 2.41 வரை

யமநேரம்: 10.34 – 12.04
ராகுகாலம்: 3.04 – 4.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கடன் கொடுப்பதால் நட்பு முறியும் என்பது தவறு; அதைத் திருப்பிக் கேட்பதால் [illegible]

— [illegible]

## சாவற்கட்டு கிராமத்தில் 90 வீடுகள் அமைப்பு

சண்டிலிப்பாய், நவ. 1

கடற்றொழில் நீரியல் வனத்துறை அபிவிருத்தி அமைச்சின் நூறு வீடுகளைக் கொண்ட மீனவர் கிராமங்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் சாவற்கட்டு கிராமத்திலுள்ள மீனவர்களுக்கு 90 வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஒன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் வீடு அமைப்பதற்கான காணியை சொந்தமாகக் கொள்வனவு செய்து வைத்திருக்க வேண்டும். வீடொன்றை நிறுவுவதற்கு நன்கொடையாக 50 ஆயிரம் ரூபாவும், இடம்பெயர்வு நிதியாக 25 ஆயிரம்ரூபாவும், மின்இணைப்பு, மலசலகூடம் ஆகியனவற்றுக்கு 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட இருப்பதாக சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

[ஐ–135]

## பிரேத அறை புனரமைப்பு

சண்டிலிப்பாய், நவ. 1

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை வைத்தியசாலை வளவில் நீண்டகாலமாக சேதமடைந்த நிலையிலிருந்த பிரேத அறையை புனரமைப்புச் செய்து கொடுத்துள்ளது.

[ஐ–135]

## வீதி சேதம்

புன்னாலைக்கட்டுவன், நவ.1

புன்னாலைக்கட்டுவன் வைத்தியசாலை வீதி குண்டும் குழியுமாகக் காட்சியளிப்பதனால் பொதுமக்கள் பிரயாணம் செய்ய முடியாமல் அவதிப்படுகின்றனர். தொடர்ச்சியாகப் பெய்யும் மழை காரணமாக வீதி சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கின்றது.

(ஐ–133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலி ஆலயகுண்டு வீச்சினை அரசு மறைக்க முயல்வது அதிர்ச்சிதருகிறது

## நீதி சமாதானக் குழு அனுருத்தவைக் கண்டிக்கிறது

யாழ்ப்பாணம், நவ. 1

நவாலி சென்பீற்றர் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலை அரசு தொடர்ந்து மறுத்து வருவது புதுக்குடியிருப்பில் நடைபெற்ற கொடூர விமானத் தாக்குதலை மறைக்க எடுக்கும் ஒரு கபட நாடகமாகும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தைக்கு யாழ்.மாவட்டநீதி சமாதான ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ள கண்டன அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நவாலி சென். பீற்றர் ஆலயம் ஒரு போதும் எமது வான் தாக்குதலுக்கு இலக்காக இருந்ததில்லை என்ற பாதுகாப்புப் படையினரின் கூற்றை திரும்பத் திரும்ப நீங்கள் சொல்வது எமக்கு பெரும் வியப்பையும் அதிர்ச்சியையும் தருவதாகவுள்ளது. இப்படியான மீன்மறுப்பு கடந்த செப்ரெம்பர் மாதம் புதுக்குடியிருப்புச் சந்தையிலே 22 பேருடைய கொலைக்கும் 47 பேர் படுகாயம் அடைவதற்கும் காரணமாயிருந்த வான் தாக்குதலை மறைக்கும் செயலுக்கு ஆதாரம் தேடும் முயற்சியாகவே அமைகிறது. இந்த வகையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் மூன்று கத்தோலிக்க ஆயர்மாரும் கொடுத்த வாக்கு மூலங்களை பொய்யாக்கும் ஒரு முயற்சியாகக் கருதப்படுகிறது.

இச்சம்பவம் நடைபெற்ற ஒரு சிலமணிகளில் நாம் அந்த இடத்தை நேரடியாகவே சென்று பார்வையிட்டோம். அங்கே இடிந்த சுவர்களையும் சிதறிய ஓடுகளையும் ஆங்காங்கே சிந்திய இரத்தத்தையும் எம்மால் காணக்கூடியதாக இருந்தது. குண்டுத் தாக்குதலால் ஏற்பட்ட சிதைவுகள் ஆலய எல்லைக்குள்ளும் வெளியேயும் காண முடிந்தது. இந்த அசம்பாவிதத்தின் போது 13 குழந்தைகள் உட்பட 120 பேர் வரை இறந்துள்ளனர். இறந்தவர்களின் உறவினர்களை நாம் சந்தித்து ஆறுதல் கூறினோம்.

உங்களுடைய தொடர் மறுப்பு முக்கிய அறிவுறுத்தல் ஒன்றை மறைக்க முயல்வதாக அமைகிறது. அதாவது 'ரிவிரச II' இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த மக்கள் ஷெல் தாக்குதலின் போதும் வான் தாக்குதலின் போதும், ஆலயத்தினுள் அடைக்கலம் புகுவதினால் எதுவித ஆபத்தும் வராதென்ற நோக்கில சென்றதும் அதே ஆலயத்தினுள் அவர்கள் வான்தாக்குதலால் கொல்லப்பட்டதுமாகும்.

'ஆலயத்தினுள் அடைக்கலம் புகுதல் பாதுகாப்பானது' என்ற இராணுவத்தினரின் கூற்றை நம்பிச் சென்ற அதே அப்பாவி மக்களே விமானத் தாக்குதலுக்கு ளானார்கள் என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

உங்கள் தொடர்மறுப்பு இனங்களுக்கிடையே வளர வேண்டிய புரிந்துணர்வு நம்பிக்கை போன்றவற்றை சிதறடிக்கச் செய்கிறது. உண்மைகளையும் யதார்த்தங்களையும் ஏற்றுக் கொள்ளுவதன் மூலம்தான் சமாதானத்தை அடைய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுளது. (க)

# மரியன்னை சேமக்காலையின் புனிதத்தைப்பேணக்கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ 1

யாழ். புனித மரியன்னை பேராலய சேமக்காலையை புனிதமாகப் பேணுவதற்கு இடையூறு ஏற்படுகிறது. இதனை சகித்துக் கொள்ள முடியாதுள்ளது. இதுவி யத்தில் தாங்கள் தலையிட்டு உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

யாழ். மரியன்னை பேராலய பங்குத் தந்தை ஏ. சி கிறிஸ்தோபர் அடிகள் யாழ். மாநகர ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர எல்லைக்குள் வதியும் கத்தோலிக்க விசுவாசிகள் இறந்த பின்னர் நாவாந்துறை தவிரபுனித மரியன்னை பேராலய சேமக்காலையில் சடலங்களைப் புதைப்பது மரபு. இது எமது விசுவாசிகளால் மிகவும் புனிதமாக பூசிக்கப்படும் இடம். இறந்த உற்றார், உறவினரின் கல்லறைகளை தரிசித்து செபிப்பது எமது பாரம்பரியம்.

கடந்த ஜூன் மாதம் 25 ஆம் திகதி ஆணையாளருக்கு இதுதொடர்பாக நாம் கடிதம் எழுதியும் கூட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் —

எனவே மீண்டும் வலியுறுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது எனவும் —

அவர் அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

[ஐ—ம]

# மலையக மக்களின் குரலை உலகெங்கும் ஒலிக்கச் செய்தவர்

## அமைச்சர் அஷ்ரப் இரங்கல்

அம்பாறை. நவ. 1

ஐம்பது ஆண்டு காலமாக மலையக மக்களின் குரலை உலகெங்கும் ஒலிக்கச்செய்த மாபெரும்தலைவர் தொண்டமான்.

இவ்வாறு அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான எம். எச். எம். அஷ்ரப்தொண்டமானின் மறைவு குறித்து வெளியிட்ட இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்திய நட்புறவுக்கு முக்கிய காரணமாக விளங்கிய தொண்டாவின் இழப்பு பேரிழப்பாகும்.

தொண்டாவை இழந்து தவிக்கும் மலையக மக்களின் சோகத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பங்கு கொள்வதுடன் அவரது மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ—5—14)

# தீவுப்பகுதியில் சேவையிலீடுபடும் பஸ்கள் அடிக்கடி பழுது

வேலணை, நவ. 1

தீவுப் பகுதிக்கான பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்கள் அடிக்கடி பழுதடைவதால் அதில் பயணத்தினை மேற்கொள்ளும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக குறிகாட்டுவானுக்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களே அடிக்கடி பழுதடைந்து இடைவழியில் நிறுத்தப்படுகின்றன. இவ்வாறு பஸ்கள் இடைவழியில் நிறுத்தப்படுவதால், வேலணை, புங்குடுதீவு ஆகிய பிரதேசங்களில் உள்ள அரச அலுவலகங்களில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் காலையில் தமது கடமைக்குச் செல்வதில் காலதாமதம் ஏற்படுவதோடு பொதுமக்கள் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்கு குறித்த நேரத்திற்கு செல்ல முடியாதுமுள்ளது. இதே போல் மாலை வேளைகளில் குறிகாட்டுவானிலிருந்து யாழ்நகர் நோக்கிச் செல்லும் பஸ்ஸும் சில வேளைகளில் பழுதடைவதால் அந்த பஸ்ஸினை நம்பி நிற்கும் அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் லொறிகள், உழவு இயந்திரம் மூலமே தமது பயணத்தைத் தொடர வேண்டி உள்ளது.

[ஐ—167]

# ஐ. நா. தினம் அனுஷ்டிப்பு

நெல்லியடி, நவ. 1

வடமராட்சி லயன்ஸ் கழக ஆதரவில் ஐக்கிய நாடுகள் தினம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கடந்த 24 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு லயன் எஸ். கதிரமலை தலைமையில் நடைபெற்றது

இவ்விழாவில் லயன் க. தணிகாசலம் பிரதம விருந்தினராகவும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஆர். குட்டித்தம்பி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

உடுப்பிட்டிக் கொத்தணிப் பாடசாலை மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஐ-109)

# காணி நிர்வாக பயிற்சிப் பட்டறை

நெல்லியடி, நவ 1

யாழ் மாவட்ட காணி உத்தியோகத்தகர்களுக்கான காணி நிர்வாக நடைமுறை பற்றிய இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை கடந்த வாரம் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு-கிழக்கு மாகாண காணி நிர்வாக திணைக்கள ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பயிற்சிப்பட்டறை ஆரம்ப விழா காணி அமைச்சின் பிரதி செயலாளரும், மாகாண காணி ஆணையாளருமான எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

வடக்கு—கிழக்கு மாகாண காணி விவசாய, கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் சி. த. மார்க்கண்டு. யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் ஆகியோர் பிரதம விருந்தினராகவும், வடக்கு — கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் ஏ. சி. செபநாயகம், யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து வைத்திலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். [ஐ-109]

# மேலும் சில பாடசாலைகளின் புலமைப் பரிசில் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், நவ. 1

கடந்த ஒகஸ்ட் மாதம்நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகி இருந்தன.

இந்தப் பரீட்சையில் குடாநாட்டுப் பாடசாலைகள் சில வற்றின் சிறந்த பெறுபேறுகள் ஏற்கனவே உதயனில் வெளியாகி இருந்தன. மேலும் சில பாடசாலைகளின்சிறந்தபெறுபேறுகள் வருமாறு:—

★ அளவெட்டி வடக்கு அ. மி. த. க பாடசாலை:- ப. கௌதமி — 126, இ. கஜந்த் — 120

★ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி:- அ. அபிராமி — 161, சி. லக்சனா — 134, து. ஜீவிதா — 132

★ நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை:- க. பரநிருபன் — 140, தி. மயூரகிரி — 127, பொ. சிவசிந்துஜா — 122.

★ அச்சுவேலி மகாவித்தியாலயம்:- சி. கஸ்தூரி — 140, சி. பங்கஜன் — 128, ஞா. பகீரதி — 122.

★ நல்லூர் ஆனந்த வித்தியாலயம்:- மா சொரூபிணி — 137, பா. நிரோஜினி — 131, நி சிந்துஷா — 119.

★ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்:- கை. அனுஜா — 160.

★ இருபாலை சி.சி.த.க. பாடசாலை:- உ தர்சினி — 159, த. அஜீபன் — 127, த. கிருத்திகா — 126.

★ நல்லூர் சென் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலை:- க.பவித்திரா — 151, செ. துவாரகா — 131, க.நிஷாந் — 124

★ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்:- சி. நிரோஜினி — 151, அ. சர்மிலன் — 135, செ.யசிதா 126

★ சாங்கனை ஸ்தான அ. மி. த க பாடசாலை:- த. டேசிகா — 160.

★ ஆனைக்கோட்டை றோ.க த.க பாடசாலை:- யோ. ஆன்ஜனனி — 134, இ. ஸ்ரீராஜ் — 120

★ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்:- ச. செந்தில் குமரன் — 178, ம. கிருத்திகா — 152, பா. சுகன்யா — 152

★ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்:- பத்மராசா பத்மநாபா — 138, பேனாட் யூலியஸ் டிலோஜன் — 127

★ இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்:- நா. சாகினி — 163, செ. நி. ஜெபன் சுகன்யா — 143, சி. செ. கிறிஸ்ரீன் பானுமதி — 133

★ திருநெல்வேலி இ.த.க, பாடசாலை:- த. ஹரிகரன் — 168, ஜெ. சுஜிவன் — 131, ப. ஜனனன் — 130

★ மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை:- இ நிஜன் — 161, ச. தர்சிகா — 151, க. பவித்திரா — 148.

★ கரணவாய் தாமோதர வித்தியாலயம்:- த முகுந்தன் — 169, ஏ.மோகனப்பிரியன் — 164, செ. சிறிநிஷாந் — 143

(ஐ-க)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா இராசையா

தனங்கிளப்பைச் சேர்ந்த சின்னையா இராசையா 30-10-99 சனிக்கிழமை காலமானார். இவர் குஞ்சுப்பிள்ளையின் அன்புக் கணவரும் ஜெகசோதி, நடேஸ்வரி, லோகேஸ்வரி, துரைரத்தினம், திலவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலிங்கத்தின் அன்பு மாமனாருமாவார்.

இவரது இறுதிக்கிரியைகள் 31-10-99 அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிகைகள் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T. விக்கி

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

(70569)

## இராசையா நல்லையா

பாடசாலை வீதி, நாவற்குழி கைதடியினைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசையா நல்லையா 31-10-1999 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சு. இராசையா—மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், கட்டப்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னையா—குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

இவர் ந. கனகமணியின் அன்புக் கணவரும், இராஜதீபன், சர்மிலன், சர்மிலா (நாவற்குழி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இ சிவானந்தம், இ. சீவரத்தினம், இ. நடேசபிள்ளை (இத்தாலி), சி. வசந்தாதேவி, தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், க. சிவனேஸ்வரன் (நீர்வேலி ப. நோ. கூ. சங்கம்), க ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், சி. மயூரன்ராஜ், மஜீவன்ராஜ் (சம்பத்திரிசியார் கல்லூரி), சி. மஜிந்தினி (வேம்படி மகளிர் கல்லூரி), மதுசாந்தினி, சி. கஜனி ஆகியோரின் பெரிய தகப்பனாரும், வரதன், சத்தியபாலதேவி, சிவஞானம், முத்துலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், நடராசா (நாவற்குழி), கதிரவேலு, இரத்தினம் [சுன்னாகம்], சரஸ்வதி [விசுவமடு], சிந்தாமணி, சற்குணம், இராசலட்சுமி [திருநெல்வேலி] ஆகியோரின் பெறாமகனும், மயில்வாகனம் [இத்தாலி], காலஞ்சென்ற சிவராசா, சின்னத்துரை [திருநெல்வேலி] ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-11-99) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சிவானந்தம்
(சகோதரன்)

பாடசாலை வீதி,
நாவற்குழி, கைதடி.

(70572)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் புயலினால் ஒரிஸாவில் பேரழிவு!

## 10 லட்சம் மக்கள் பாதிப்பு

விசாகப்பட்டினம், நவம்பர் 1

**இந்தியாவின் கிழக்கு மாநிலமான ஒரிஸாவை மிகப்பலமான புயற்காற்று தாக்கியதில் அங்கு பெரும்அழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன.**

வங்காள விரிகுடாவில் மையங்கொண்டிருந்த புயல் ஒரிஸாவைக் கடந்து சென்ற போது இந்த சேதங்கள் ஏற்பட்டன.

தொலைத் தொடர்பு சேவைகள் முற்றாகச் செயலிழந்து விட்டிருப்பதால் சேதங்கள். உயிரிழப்புக்கள் குறித்த சரியான விவரங்கள் — புயல் ஓய்ந்து 48 மணித்தியாலங்கள் கழிந்த பின்னரும் கூட— தெரியவரவில்லை,

சுமார் 10 லட்சம் மக்கள் இந்தப் புயலினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

பெரும் எடுப்பில் உதவி மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முழு அளவில் மின்சாரம் தடைப்பட்டதால் உதவிப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

பாதிப்புற்ற பத்து லட்சத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு உதவ இராணுவம் சிவில் அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றுகின்றது.

நூற்றுக்கணக்கான மக்கள் இறந்திருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

பெரும் புயல் பாதித்த ஒரிஸா மக்களுக்கு உதவி மீட்புப் பணியாற்ற தொண்டு சுகாதார நிறுவனங்களும் பொது மக்களும் முன்வர வேண்டும் என்று பிரதமர் வாஜ்பாய் அழைப்பு விடுத்துள்ளார்.

புயல் எச்சரிக்கை விடுக்கப் படுவதற்கு முன்னர் மீன் பிடிக்கப் புறப்பட்ட மீன் பிடிப் படகுகள், விசைப்படகுகளின் நிலைமை பற்றி அறிய மேற்கு வங்காளத்தின் மிர்னப்பூர் மாவட்ட அதிகாரிகள் ஒரிஸா அரசை நாடியுள்ளனர். கஷ்பூரியில் 15 மீன் பிடிப் படகுகளில் இருந்தும் பஜராத் அருகே 88 மீன் பிடிப் படகுகளில் இருந்தும் மொபைல் தொலைபேசி மூலம் மீனவர்கள் ஒரிஸா அதிகாரிகளைத் தொடர்பு கொண்டதாகஅந்த மாவட்ட ஆட்சியாளர் கூறினார்.

அவர்கள் பத்திரமாக இருப்பதாகவும் —

பதினைந்து நாள்களுக்கான உணவு அவர்களிடம் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது. கடல் கொந்தளிப்பு ஓய்ந்ததும் அவர்கள் கரை திரும்புவார்கள். இதுவரை ஒரு மீனவரை மட்டுமே காணவில்லை என மாநில மீன் வளத்துறை அமைச்சர் கூறினார்.

புயல்பாதித்த ஒரிஸா மக்களுக்கு பொருள்களைக் கொண்டு செல்ல சிறப்பு ரயில் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் இரண்டாயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு ரயில் ஒன்று நேற்றுப் புறப்பட்டுள்ளது ஒரிஸாவுக்கு அண்மையில் உள்ள மாநிலங்களும் உதவிப் பொருள்களை அனுப்பி வருகின்றன.

இந்த நூற்றாண்டில் இந்தியாவின் கிழக்குக் கரையைத் தாக்கியமிகப்பலமான புயற்காற்று இது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

## ஒஸாமா பின்லேடனை ஒப்படைக்கப் போவதில்லை

### தலிபான் மீண்டும் தெரிவிப்பு

காபூல், நவ. 1

பிரபல சவுதி கோடீஸ்வரர் ஒஸாமா பின்லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைக்கப் போவதில்லை என்று தலிபான் அமைப்பு தெரிவித்துள்ளது

அமெரிக்காவின் கோரிக்கைக்கும் ஐ நா. விதிக்கவுள்ள தடைகளுக்கும் அஞ்சி ஒஸாமா பின்லேடனை ஒப்படைக்க தலிபான் அமைப்பு இணங்கி உள்ளதாக வெளியான தகவல்களையும் அந்த அமைப்பு முற்றாக நிராகரித்துள்ளது.

இதேவேளை —

பின்லேடனை தம்மிடம் ஒப்படைக்க தலிபான் மீது செல்வாக்கைப் பிரயோகிக்குமாறு பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளரிடம் அமெரிக்கா கேட்டிருக்கிறது.

[ஐ-க]

## பாக். விமானம் விபத்தில்

இஸ்லாமாபாத், நவ. 1

பாகிஸ்தான் இராணுவ விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த 24 பேரும் கொல்லப்பட்டனர்.

வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்த விமானம் தஜகிஸ்தான் கரையோரம் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விமானம் விபத்துக்கு உள்ளானதற்கான காரணங்கள் எவையும் இதுவரை வெளியிடப்படவில்லை. விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-க)

## தேர்தலில் போட்டியிட கட்டுப்பாடு

றியாட், நவ. 1

பாகிஸ்தான் அரசியல்வாதிகள் முறைகேடாக சொத்துக்கள் சேர்த்திருப்பின் அவர்கள் எந்த ஒரு தேர்தலிலும் போட்டியிட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியாவின் றியாட்டில் செய்தியாளர் மத்தியில் பேசும் போதே முஷாரப் இவ்வாறு தெரிவித்தார்.

தேவைப்படும் காலத்துக்கு மேலதிகமாக இராணுவம் ஆட்சியில் இருக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

]க]

## பாகிஸ்தானை விட்டு வெளியேறும் கோரிக்கையை ஷெரீப் நிராகரிப்பு!

பாகிஸ்தானில் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் நவாஸ் ஷெரீப்பை நாட்டை விட்டுவெளியேறுமாறு இராணுவ ஆட்சியாளர்கள்கேட்டிருக்கின்றனர் அவர்களின் கோரிக்கையை நவாஸ்ஷெரீப் நிராகரித்துவிட்டதாக ஷெரீப்பின் மனைவி தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத் பத்திரிகைச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

நாட்டைவிட்டு வெளியேறி அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்குமாறு இராணுவ ஆட்சியாளர்கள் கேட்டிருப்பதாகவும்.

ஆனால் தாங்கள் அவை இரண்டையுமே நிராகரித்து விட்டதாகவும் திருமதி குல்சூம் நவாஸ் முஸ்லிம் லீக் கட்சி ஆதரவாளர்களிடையே பேசிய போது தெரிவித்தார்.

# தேசிய ஒருங்கிணைப்பை உருவாக்க இலங்கை கல்வி முறை தவறி விட்டது

## நினைவுப் பேருரையில் தெரிவிப்பு

பல்லின மக்களைக் கொண்ட, பல்வேறு கலாசாரங்களைத் தன்னகத்தே கொண்ட இலங்கை போன்ற ஒரு நாட்டில் அதன் பொருளாதார வளர்ச்சிக்கும், அறிவியல் முன்னேற்றத்துக்கும் தேசிய ஒருங்கிணைப்பு அவசியம் தேவை. அவ்வகையில் தேசிய ஒருங்கிணைப்பை உருவாக்குவதில் இலங்கையில் பின்பற்றப்பட்டு வருகின்ற கல்வி முறையானது இதுவரையில் சாதித்தவற்றை விட சாதிக்க வேண்டியவையே அதிகம் எனக் கூறவேண்டும்.

சேர்.பொன். இராமநாதன் நினைவாக யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற நினைவுப் பேருரை நிகழ்வில் உரையாற்றிய கல்வியியல் பேராசிரியர் வ. ஆறுமுகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 'இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் கல்வியும் தேசியஒருங்கிணைப்பும்' என்ற தலைப்பில் பேராசிரியர் ஆறுமுகம் நினைவுப் பேருரையாற்றினார்.

அவர் தனது உரையில் கூறியதாவது—

தேசியம் என்ற பதத்துக்கு ஜோன் ஸ்ருவட் பில் போன்ற அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளார்கள்.

எனினும் சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின் மொழியால், பண்பாட்டால், பாரம்பரியத்தால், கலாசாரத்தரல் வேறுபட்ட பல சமூகங்கள் ஒரு தேசிய அலகாக வரையறுக்கப்படும்போது தேசியமாக கொள்ளப்படுகிறது.

சமூக கலாசார மேம்பாடுகளை மட்டுமல்லாமல் ஒரு பொது உளச் சார்பு என்ற அடிப்படையில் இலங்கையில் தேசியம் பின்பற்றப்பட்டதா என்ற வினாவை எழுப்பினால் விடை இல்லை என்றே குறிப்பிடவேண்டி உள்ளது.

### தேசிய அரசு

வரலாற்றுக் காலகட்டத்தில் இலங்கையில் பல அரசுகள் காணப்பட்டாலும் கூட அவை பெரியளவாக காணப்பட்ட சந்தர்ப்பங்களில் தேசிய அரசுகள் எனக் குறிப்பிடப் பட்டாலும் கூட அவை தேசிய அரசாகக் கொள்ளப் படுமளவுக்கு ஏற்புடையவையாக விளங்கவில்லை.

1815 ஆம் ஆண்டு கண்டி இராஜ்யம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டு ஓர் அரசாக கொள்ளப்பட்டாலும் கூட தேசிய அரசு என்ற வரைவிலக்கணத்துக்கு உட்பட்டதாக அவ் இலங்கை காணப்படவில்லை.

இருபதாம் நூற்றாண்டு காலப்பகுதியில் கூட மக்கள் மத்தியில் கிளர்ந்தெழுந்த உணர்ச்சி வெளிப்பாடுகள் காலமாற்றங்களில் பல்வேறு வகை அழுத்தங்களுக்கு உட்பட்டு நம்மிடையே பிளவுபட்டு நின்ற தன்மையை அவதானிக்க முடிகிறது.

### பெரும்பான்மை சிறுபான்மை

இலங்கை பல்லினமக்களை தனனகத்தே கொண்ட ஒரு நாடு என்ற வகையில் தோற்றம் பெற்ற கொள்கை ரீதியான அடிப்படை வேறுபாடுகள் பெரும்பான்மையினர், சிறுபான்மையினா என்ற தோற்றப்பாட்டை வெளிப்படுத்தின.

அவ்வகையில் பெரும்பான்மையினருக்கு கிடைத்த உரிமைகள் சலுகைகள் தமக்கும் கிடைக்கவேண்டும் என்ற அபிலாசை சிறுபான்மை இனத்தவர்கள் மத்தியில் தோற்றம் பெற்றது. இல்லாவிட்டால் தாங்கள் அழிந்து விடுவோமோ என்ற அச்ச உணர்வு கூட அவர்கள் மத்தியில் தோற்றம் பெற்றதில் விபப்பில்லை.

இந்த வகையில் காலத்துக்குக்காலம் பின்பற்றப்பட்டு வந்த கல்விக் கொள்கைகள் தேசிய ஒருங்கிணைப்பை எந்த வகையில் ஏற்படுத்த முயற்சித்தன? அவை எந்தளவுக்கு சாத்தியப்பட்டது? என்பன ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

கல்விச் செயற்பாடானது முரண்பாடுகளைக் களைந்து மக்கள் மத்தியில் ஒரு புரிந்துணர்வை இணக்கப்பாட்டினை ஏற்படுத்துமளவுக்கு கல்வியின் பார்வை விரிந்ததாக அமைய வேண்டியது அவசியமாகிறது.

ஆனால் காலத்துக்குக் காலம் உருவாக்கப்படும் கல்விக் கொள்கைகள் கல்விக்குப் புறம்பான அரசியல் மற்றும் இன்னோரன்ன புறக்காரணிகளால் அக்காரணிகளின் தவறான நெறிப்படுத்தல்களால் தமது நோக்கை சரிவர எட்டத் தவறிவிட்டன என்றே கொள்ள வேண்டி உள்ளது.

இலங்கையில் தேசிய ஒருங்கிணைப்பு என்ற வகையில் சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பட்ட காலகட்டத்தில் படித்த இலங்கையர் என்ற மத்தியதர வர்க்கத்தினரின் தோற்றமானது நாம் சுய கௌரவமுள்ள இலங்கையர் என்ற ஒரு தேசிய விழிப்புணர்ச்சி தோற்றம் பெற்றதை குறிப்பிடமுடிகிறது.

### கல்வியியலாளர் பங்களிப்பு

அவ்வகையில் ஆறுமுகநாவலர், ஸ்ரீசுமங்களதேரர், அநாகரிக தர்மபால போன்ற கல்வியியலாளர்கள் மத வாதிகள் போன்றவர்கள் தத்தம் பாரம்பரிய கலாசார விழுமியங்களால் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த முனைந்தனர் எனலாம்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 20 ஆம் நூற்றாண்டு ஆரம்ப கட்டத்தில் சேர். ஜேம்ஸ் பீரிஸ், சேர் பி. ஜயதிலக, சேர். பொன் இராமநாதன் மற்றும் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி போன்றோர் இலங்கையின் பாரம்பரிய பண்பாடுகளை தமக்கே உரிய வகையில் கட்டிக் காக்க முற்பட்டனர் எனலாம்.

சேர் பொன். இராமநாதன் கல்வி கற்ற இலங்கையர் என்ற வகையில் சட்ட நிருபண சபை அங்கத்தவராக இலங்கை முழுவதற்கும் தெரிவு செய்யப்பட்டமை தேசிய ஒருங்கிணைப்பை அச்சமயத்தில் வலியுறுத்துவதாக அமைந்தது.

### மொழிக் கொள்கைகள்

ஆனால் பிற்காலங்களில் இலங்கை அரசுகளால் பின்பற்றப்பட்ட மொழிக் கொள்கைகள் குறுகிய இலாப நோக்கில் தூர எறியப்பட்டதும், அவை இறுக்கமாக வலியுறுத்தப்படாது போனமையும் துரதிர்ஷ்டவசமானவையே.

மேலும் அரசாங்கங்களால் மாணவர்களுக்கென அறிமுகப்படுத்தும் பாடவிதானங்களில் கூட வரலாற்று திரிபுகளும், சில வேளைகளில் ஒரு சில இனத்தின் சம்பவங்களை மிகைப்படுத்தியும் கூறப்பட்டிருப்பது தேசிய ஒருங்கிணைப்பை நிச்சயமாக வலுப்படுத்துவதாக அமைய மாட்டாது.

சமய நூல்கள் கூட தேசிய உணர்ச்சியை வளர்ப்பதற்கு பதில் அவ்உணர்ச்சியை மழுங்கடிப்பதாகவே அமைவதனை காண முடிகிறது.

மலரப்போகும் புத்தாண்டில் நாட்டில் சமாதானம், சாந்தி நிலவுவதற்கு தேசிய ஒருங்கிணைப்பை உருவாக்குவதற்கான கட்டுமாணங்கள் கட்டி எழுப்பப்பட வேண்டும். இவற்றுக்கு தற்பொழுது பின்பற்றப்பட்டு வரும் கல்விக் கொள்கைகள் எந்தளவுக்கு உதவப் போகின்றது என்பது கேள்விக்குரிய ஒன்றாகவே உள்ளது.

யாழ். பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பாலச்சந்திரன் நன்றியுரை நவின்றார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாலை மரத்தினால் செய்யப்பட்ட நல்ல நிலையில உள்ள நாய்க்கூடும் தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 143, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(70488)

சகல வசதிகளுடன் கூடிய பெரிய மாடி வீடு (படுக்கை அறை குளிரூட்டி பொருத்தப்பட்டது) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றிக்கோ பத்மநாதன் 22/3A, விதானை வீதி, சுண்டுக்குளி. (70443

ஐஸ்கிறீம் தயாரிக்கும் மெஷின் மற்றும் மின்சாரத்தில் இயங்கும் கோப்பி வறுக்கும் இயந்திரமும் (றோஸ்ரர்) கோப்பி அரைக்கும் இயந்திரமும், ரெலிபோன் கூடும், மரத்தில் செய்த சோக்கேஸ் என்பனவும் உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: றிக்கோ பத்மநாதன் 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(70442)

யாழ்ப்பாணப் பலகலைக்கழகம்

ஈராண்டுப் பகுதி நேரப் பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறி 1999 / 2000

## புதிய அனுமதி

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 1999 — 11 — 17 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெறவிரும்புவோர் நிதிக் கிளையில் ரூபா 50 செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பீடாதிபதி அலுவலகம், உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத்தேர்வு / நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளுக்கமையத் தெரிவுகள் இடம்பெறும். தேர்வுத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து 25மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கைநெறிக்குப் பதிவு செய்யும் போது மேற்குறிப்பிட்ட இடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைப் பீடாதிபதி, உயர்பட்டப் படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு 1999 - 11 - 18 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி/9613)

## விற்பனைக்கு

இரண்டு பொமனேறியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஜெகன், மணியம் ஸ்ரோர்ஸ், மானிப்பாய் றோட், உடுவில்.

(70563)

$3\frac{1}{4}$' உயர திண்டுக்கல் இரும்புப் பெட்டி (அயன்சேவ்) 311, K.K.S வீதி கடையிலும், $2\frac{1}{4}$' உயர திண்டுக்கல் இரும்புப் பெட்டி (அயன்சேவ்) 92, 4 ஆம் குறுக்குத் தெருவிலும் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ்.கே. பிள்ளை, 92, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம்: காலை 9 — 4 மணிவரை.

(70451)

மானிப்பாய் வீதி, உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் $3\frac{1}{2}$ பரப்புக் காணியில் தனிக் கிணற்றுடன் நான்கு அறைகள் கொண்ட நல்லவீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr. P இராமநாதன் தாவடிச் சந்தி, கொக்குவில் (70485)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை தென்மேற்கு பிரப்பங்குளம் வீதி, இலக்கம் 145/3 இல் அமைந்துள்ள கட்டடம் கட்டிக் குறைநிலையில் உள்ள வீடும், நிலப்பரப்பு ஒன்றும் குளி 2. 7 கொண்ட காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. கனகரட்ணம் இல. 25/14 ஒடை ஒழுங்கை, வண்ணார் பண்ணை தென்மேற்கு, யாழ்ப்பாணம் அல்லது 446, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (70502)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

எமானுவேல் சுதர்ஷன் என்பவருடைய அடையாள அட்டையும் மூன்று உறுதியும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9605)

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள ஒக்ஸ்போட் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவலிங்கம் மோட்டோஸ் 77, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.

(70564)

லண்டன் இரும்புப்பெட்டி (2 அடி $1\frac{1}{2}$ அடி) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: 105 (249), கே.கே. எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

(70560)

## வீடு விற்பனைக்கு

கொடிகாமம்பருத்தித்துறை வீதியில் சகல பயன்தரும் மரங்கள் உள்ள 20 பரப்புக் காணியும் அதனுடன் அமைந்த கல்வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: யாழ். மெடிக்கல் சென்ரர். இல. 166. முதலாம். குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(சி/9604)

## மணமகன் கேவை

பிரான்சில் (France) நிரந்தர விசாவுடன் வேலை செய்யும் A/L படித்த அழகான 24 வயதுடைய கிறிஸ்தவப் பெண்ணுக்கு பெற்றோர் வரன் தேடுகின்றனர். வெளிநாடு விரும்பத்தக்கது. விள இ. 965 மே/பா உதயன்.

(70529)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### வேலாயுதம் சிவசுப்பிரமணியதேவா

(தலைவர், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாரின் துயரில் பங்கு கொள் தோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அண்ணா தொழிலகம்,
இணுவில்.

(சி/9612)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தைச் சேர்ந்த
க. கமலநாதன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கணபதிப்பிள்ளை கனகம்மா

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பாதுகாப்பு நலன்புரிச்சங்கம்,
பாதுகாப்புப் பகுதி,
யாழ். பல்கலைக்கழகம்.

(70558)

## தொண்டமனாறு வெளிக்கள நிலையம்

F W C

### NEWS LETTER

தொண்டமனாறு வெளிக்கள நிலைய செய்தி ஏடு (News Letter) கிடைக்கப்பெறாத உறுப்பினர்கள் தயவு செய்து செயலாளருடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பொ. சிவானந்தராஜா,
செயலாளர்,
தொண்டமனாறு வெளிக்கள நிலையம்

யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்,
01 - 11 - 1999.

(சி/9614)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கரணவாய்

### வேதாரணியேஸ்வர வித்தியாலயம்

5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

| ஆண்டு | சித்தியடைந்த மாணவர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 1998 | நவரத்தினராசா அகிலன் | 130 |
| | நிஷாந்தி ரவீந்திரன் | 111 |
| 1999 | ஜனனி குமாரசாமி | 155 |
| | ராஜேஸ்வரன் நிதர்சன் | 152 |

இவர்களை வாழ்த்துவதோடு ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்

(70577)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

★★★★★★★★★★★★★★★★★★★★

யா / கைதடி விக்னேஸ்வரவித்தியாலயம்
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 1999
செல்வன்

### குணரத்தினம் ஜெயமோகன் - 136புள்ளி

மேற்படி சித்தியடைந்த மாணவனையும் அவரது உயர்வுக்கு உந்து சக்தியாகவும், வழிகாட்டியாகவும் இருந்த அதிபர், உபஅதிபர். ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்
யா / கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்.

(70573)

**SCIENCE & TECHNOLOGY - Yr. 9**
**SCIENCE - Yr. 10 - O/L**

ஆசிரியர்: திரு. செந்தில்குமரன்

**வகுப்புக்கள் Radiant Institute - இல்** நடைபெறுகின்றன.

பிரத்தியேக வகுப்புக்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:

① RADIANT INSTITUTE (KACHCHERI EAST LANE) (ஏனைய நாள்களில்)

② NEW BRIGHT EDUCATION CENTRE (MARTYN ROAD) (Yr. 8 - Maths) (செவ்வாய், வெள்ளி)

Note:- Yr. 9 மாணவருக்கு புதிய பாடத்திட்டத்திற்கமைய தெளிவான விளக்கங்களும் சிறந்த குறிப்புக்களும் வழங்கப்படும்.

Radiant Institute Kachcheri East lane.

(70538)

## மலிவு விலையில்

பலவர்ணங்களில் ▶ சுவர் மாபிள்கள் ▶ நில மாபிள்கள் ▶ ரெச்சீற் வகைகள் ▶ நிலவிரிப்புகள் ▶ வோஷ்பேசின் ▶ கொமோட் ▶ K சிங் ▶ Lab சிங் ▶ Steel சிங்

மற்றும்

இறக்குமதி செய்யப்பட்ட ▶ பீங்கான் கோப்பைகள் ▶ ரீ செற் ▶ டினர் செற் ▶ கப் & சோசர் ▶ கிளாஸ் வகைகளை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

### புதிய விமாகி

27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(பஸ் தரிப்புக்கு முன்பாக)

[70570]

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் இராசையா நல்லையா

(செயலாளர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யா/நாவற்குழி ம. வி.)

31-10-99 அன்று அமரரான இராசையா நல்லையா அவர்களின் மறைவையிட்டுத் துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபி. சங்கத்தினர்,
யா / நாவற்குழி ம. வி.

(70574)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SALE SALE

இதோ!

உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!

மகாநதி வழங்கும்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

07 - 11 - 99 வரையுமே!

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்
தீபாவளிப் புடைவை ரகங்களுக்குச் சழிவு உண்டு.

மகாநதி

புடைவை அகம்

(முகூர்த்த பட்டுப் புடைவைகளுக்குக் கைராசியான ஸ்தாபனம்)

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T. P. 2552

4, நவீன சந்தை, சாவகச்சேரி.

சாறி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்கு
பிரத்தியேகக் காட்சி அறைகள்

16, நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

நவீன சந்தை, (மேல்மாடி) சாவகச்சேரி.

[சி/9591]

# சுற்றாடல் முன்னேற்றப் படையணி பாடசாலைகள்தோறும் நிறுவப்படும்

அச்சுவேலி. நவ:1

பாடசாலைகள் தோறும் 'சுற்றாடல் முன்னேற்றப் படை அணி' அமைக்கப்படவுள்ள இது தொடர்பான சுற்றறிக்கையினை கல்வி உயர் கல்வி அமைச்சு வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

'சுற்றாடல் எம்மைக் காக்கும்— சுற்றாடலை நாம் காப்போம்' என்ற மகுட வாக்கியத்துடன் நிறுவடபடவுள்ள சுற்றாடல் முன்னேற்றப் படை அணி 7 ஆம் தர மாணவர்களாகக் கொண்ட அணிகளாகவும்; 7 ஆம் தரத்திற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட அணிகளாகவும் இரண்டு பிரிவுகளாக நிறுவப்படவுள்ளது.

பாடசாலைச் சமூகச் சுற்றாடலைப் பாதுகாத்தல், அவற்றை பேணுதல் சமூகத்திற்கு விளக்கம் கொடுத்து ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல் போன்ற பணிகளை முன்னெடுக்கும் சுற்றாடல் முன்னேற்றப்படை அணி ஒவ்வொன்றும் 25 மாணவர் கொண்டதாகச் செயற்படும்.

சுற்றாடல் முன்னேற்றப் படை அணிக்கு சீருடை, கீதம் சின்னம் என்பன அறிவிக்கப் பட்டுள்ளன. [ஐ-11]

யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

## தரம் 6 அனுமதி - 2000

விண்ணப்ப முடிவு திகதி: 17. 11. 1999

அனுமதிப் பரீட்சை : 21. 11. 1999

விண்ணப்பப் படிவத்தைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

— அதிபர்.

(70496)

## சமுர்த்தி முகாமையாளர்

குடாநாட்டில் கடமையாற்றவென 42 சமுர்த்தி முகாமையாளர்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் புதன் கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றுவோருக்கு இது சம்பந்தமான அறிவித்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

[இ-9-10]

## யன்னல் உடைத்து பொருள்கள் சூறை

வலி. கிழக்கு, நவ 1

நள்ளிரவில் வீட்டின் ஜன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் தங்கநகைகள், ரேடியோ மற்றும் பெறுமதிமிக்க சாறிகள் உட்பட 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை சூறையாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதனன்று இரவு ஒரு மணியளவில் நல்லூர் சட்டநாதர் கோயிலடியில் உள்ள உதயகுமார் என்பவரது வீட்டில் இடம்பெற்றது

திருடர்கள் வீட்டின் பின் பக்கமாக உள்ள யன்னல் கம்பியினை உடைத்து அறையினுள் சென்று அங்கிருந்த தங்கநகைகள் உட்பட 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியுள்ளனர்.

திருடர்கள் வீட்டில் பொருள்களைச் சூறையாடிவிட்டு அங்கு சுடுதண்ணீர்ப் போத்தலில் இருந்த தேனீரையும் குடித்து தமது தாகத்தையும் தீர்த்து விட்டுச் சென்றுள்ளார்கள்.

இச்சம்பவம் நடந்து சில மணி நேரம் கழிந்த பின்னரே வீட்டில் திருட்டு இடம்பெற்றிருப்பது வீட்டாருக்கு தெரிய வந்தது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் நடத்தி வருகின்றனர் —

இதேபகுதியில் கடந்தமாதம் 10 ஆம் திகதியும் ஒரு வீட்டில் திருட்டு இடம்பெற்றுள்ளது. (ஐ-180)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 06 – 09 – 1916

மறைவு: 12 – 11 – 1998



### திருமதி நல்லநாயகி திருஞானசம்பந்தர்

திதி:- 01 - 11 - 1999

அன்பு வழிகாட்டி எம்மை அரவணைத்து
பண்பு வழியதனில் எம்மை வாழ வழிகாட்டி
- வைத்த எங்கள் அம்மா!
அஞ்சலிகள் செய்கின்றோம் அரனடிக்கீழ் இன்புறவே.

– குடும்பத்தினர்

சிவன் கோயிலடி,
புத்தூர்.

(70549)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 24 -- 03 -- 1959

ஆண்டவனடியில்: 12 -- 11 -- 1998

### அமரர் வயிரன் கணேசலிங்கம்

(சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை ஊழியர்)

திதி: 01 --- 11 --- 99 நவமி

அன்பின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் நேசக் கரம் நீட்டி
எம் நெஞ்சங்களில் தூய சுடரேற்றிய
எம் செல்வமே! குலவிளக்கே!
ஓராண்டு வந்ததுவா? நம்ப முடியவில்லை
ஓராண்டு ஒருகணமா? எமக்குப் புரியவில்லை
நெஞ்சு வெடிக்கிறது: நேற்றுப் போல் இருக்கின்றது
அன்பூட்டி அமுதூட்டி அரவணைத்த அப்பாவே!
பாலர் நாம் பாதையிலே நடந்திட
பாதி வழியில் பரிதவிக்க விட்டுச் சென்றீரே!
ஆதரிக்க ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அரவணைக்க ஆயிரம் உள்ளம் இருந்தென்ன
அப்பா! என்றழைக்க நீங்களில்லையே
பொல்லாத பூமிதனில் நல்லார்க்கு இடமில்லையென
காலனவன் எமை காலம் முழுதும் கண்கலங்கச்
செய்திட்டான்
அப்பா! அவன் கவர்ந்தது உம் உயிரைத்தான்
ஆனால் உம் நினைவுகள் எம் உடலுடன் கலந்து
என்றும் நீங்காது நிலைத்திருக்கும்.

உம் பிரிவால் துயருறும்.

மனைவி, பிள்ளைகள், பெற்றோர்,
சகோதரர்கள், மாமா, மாமி,
மைத்துனர்கள்.

மிருசுவில்.

(சி/9610)

★ மாபெரும் மலிவு விற்பனை ★

வரும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

சகல விதமான ஜவுளித் தினுசுகளையும் மிகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
வாருங்கள்! வாருங்கள்!!

ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரியகடை, யாழ்ப்பாணம்.

T.P. 2469

(சி/9590)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
மானிப்பாய்

## தரம் 6 அனுமதி - 2000

மேற்படி வகுப்புக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அலுவலகத்தில் 29 - 10 - 1999 முதல் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 30 . 11 . 1999

- அதிபர்

(70458)


## நவாலி விவசாயிகளுக்கு விதைகள்

வலி.தென் மேற்கு, நவ.1

நவாலி விவசாயிகள் சம்மேளனத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள 10 விவசாயிகளுக்கு உணவு விவசாய ஸ்தாபனத்தின் விதை விநியோகம் செய்யப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளும் இன்று திங்கட்கிழமை பெரும்பாக உத்தியோகஸ்தர் காரியாலயத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ—185)


# தொழில்நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்
## பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம் - 2000

மேற்படி கல்லூரியின் 2000 ஆம் கல்வி ஆண்டிற்கான பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பம் 8-10-99 ஆந் திகதிய அரச வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. பயிற்சிநெறிகளுக்கான எமது கல்லூரி விண்ணப்பங்கள் 30-11-99 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை அறியத்தருவதுடன், இது சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு கல்லூரியுடன் தொடர்புகொள்ளவும்.

அதிபர்

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
1999-10-29

(சி/9594)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையில் 1999-ம் ஆண்டு 5ஆம் தரப்புலமைப் பரீட்சையில் 133 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமாணவியான

## செல்வி இந்துஜா யோகரத்தினம்

அவர்கட்கு எங்கள் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து இவர்களை வழி நடத்திய முன்னாள் அதிபர் திருமதி க. சுப்பிரமணியம் [உதவிக் கல்விப் பணிப்பாளர்] அவர்களுக்கும் 5 ஆம் தரத்தில் கல்வியூட்டிய சகல ஆசிரியர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் பிரதி அதிபர், அதிபர் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. திருமதி ந. யோகரத்தினம்
பெற்றோர்.

யா/கொக்குவில்
ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை,
கொக்குவில்.

[70515]


## 33 பெண்கள் கைது

மட்டக்களப்பு, நவ. 1

அக்கரைப்பற்று சாகாமம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சுற்றிவளைப்பில் 33 தமிழ் யுவதிகள் கைது செய்யப்பட்டனர்.

இப்பகுதியிலுள்ள பொலீஸ் நிலையம் மீது கடந்த புதன் கிழமை விடுதலைப்புலிகள் தாக்குதலொன்றை நடத்தினார்கள்.

இத்தாக்குதலின் பின்னரே இந்த யுவதிகள் கைது செய்யப்பட்டார்கள்.

[இ-5-21]


### பாராட்டி
# வாழ்த்துகின்றோம்

## யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம்.

## புலமைப் பரிசில் பரீட்சை - 1999

| பெயர் | புள்ளிகள் | மாவட்ட நிலை |
|---|---|---|
| 1. கை. அனுஜா | 160 | 26 |
| 2. இ. கார்த்திகா | 132 | 383 |
| 3. ம. நிசாலினி | 128 | 472 |

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் இவர்களுக்காக அயராது ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களையும் மனமுவந்து பாராட்டுகின்றோம்.

பெற்றோர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பாடசாலைப் பழைய மாணவர் சங்கத்தினர்.

[70470]



### வாடிக்கையாளர்களுக்கான நற்செய்தி!
# சிவா றெக்ஸ்ரைல்ஸ்
ஸ்தாபனத்தார்

தீபாவளியை முன்னிட்டு அளிக்கும்

## மாபெரும் மலிவு விற்பனை

♣ பெண்களுக்கான:-

- புதிய டிசைன் சாறிவகைகள்
- ஸ்கேட் அன் பிளவுஸ்
- பஞ்சாபி
- சுடிதார்
- சோளி செற்
- இம்போட் புறொக்ஸ்
- பேபி புறொக்
- புதிய டிசைன் லேடீஸ் துணிவகைகள்

♣ ஆண்களுக்கான:-

- இம்போட் சேட் வகைகள்
- T சேட் வகைகள்
- டெனிம் சேட்
- டெனிம் ஜீன்ஸ்
- றெடிமேட் ஜீன்ஸ்
- புதிய சூட்டிங் வகைகள்
- வேட்டி
- சாறம்
- பெட்சீற்

♣ குழந்தைகளுக்கான:-

- பேபி சூட் அயிட்டங்கள் அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

**சிவா றெக்ஸ்ரைல்ஸ்**
இல. 27, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

**சிவா றெக்ஸ்ரைல்ஸ்**
இல. 28, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(70561)



தீப ஒளிவீச ஆடைகளின் சாம்ராஜ்ஜியம் ஒன்று உங்களை வரவேற்கிறது!

அது **வாணி றெக்ஸ்**

உணவின் சுவை மெருகூட்டல் நாவிற்கு! அதுபோல உடலின் ஆடை மெருகூட்டல் கண்களுக்கு!
சேலைத் தெரிவுகளை நீங்கள் எங்கும் தெரிவு செய்யலாம் - ஆனால்
சேலைக்கான பிளவுஸ் பீஸையும் இணைந்து தெரிவு செய்யக்கூடிய
ஒரே இடம் அது நிரந்தரம்

# வாணி றெக்ஸ்

நாளுக்கு நாள் மாறுகின்ற ஆடைத் தெரிவுகள் உடனுக்குடன் எம்மை வந்தடைகின்றன.

கழிவு விலை என்று நாம் ஆசை காட்டுபவர்கள் அல்லர்.
இப்பொழுது கழிவுடன் ஒரு கூட்டலும் எம்மிடம் கிடைக்கிறது
அது என்ன? படி ஏறி வாருங்கள் விடையினைக் காணுவீர்கள்.

# வாணி றெக்ஸ்

இல. 11, நவீன சந்தை
சாவகச்சேரி.

இல. 5, நவீன சந்தை
மேல்மாடி,
சாவகச்சேரி.

T. P. No. 070 - 212429

(சி/9609)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கு

# யாழ். மாவட்ட அணியினர் 120 ஓட்டங்களினால் வெற்றி

## நேற்றைய முதல் நாள் ஆட்டத்தில்

யாழ்ப்பாணம், நவ 1

மிட்சுஇ — ஜெசிபா வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் யாழ்., திருமலை, மட்டு., வவுனியா ஆகிய நான்கு மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தும் 50 ஓவர்கள் கொண்ட மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி 120 ஓட்டங்களால் திருமலை அணியைத் தோற்கடித்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மாவட்ட அணித் தலைவர் கே.சசிகரன் தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். யாழ். அணி 48 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. யாழ். அணிக்காக எஸ். எஸ். பாஸ்கரன் 33 ஓட்டங்களையும் ஏ. எஸ். நிஸாந்தன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சு மற்றும் களத் தடுப்பிலும் திறமையைக் காட்டிக் கூடியிருந்த ரசிகர்களின் பாராட்டைப் பெற்ற திருகோணமலை அணியினர் யாழ். அணி வீரன் என். சுதேஷ்குமாரின் அபாரமான பந்து வீச்சால் 18 ஆவது ஓவரிலேயே சகல விக்கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

யாழ். அணியைச் சேர்ந்த வி. பி. சுபாஸ்கரனும் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்தச் சுற்றுப் போட்டியில் நாளை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் ஆட்டத்தில் திருமலை — வவுனியா மாவட்டங்களின் அணிகள் மோதுகின்றன. (இ-3-4)

### இறுதி ஆட்டம்

விலிகாமம், நவ. 1

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 14 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 2 30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இந்த இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதவிருக்கின்றன.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு ஜசிந்தாறோ. க. பாடசாலை அணி விளையாடும்.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கம் தலைமையில்நடைபெறும் இந்த நிகழ்வில் உடற்கல்வி உதவிக்கல்விபணிப்பாளர் வீ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-3-8)

### கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார்

மெல்போன், நவ. 1

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் மூத்த வீரர்களுள் ஒருவரும் உலகின் சிறந்தவிக்கெட் காப்பாளர்களில் ஒருவருமான இயன்ஹீலி தனது கிரிக்கெட் வாழ்வில் இருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்துள்ளார்.

119 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடிய ஹீலி 395 பேரை ஆட்டமிழக்கச் செய்துள்ளார் 35 வயதான இவர் தென் ஆபிரிக்க அணியுடனான டெஸ்ட் ஆட்டத்தில் ஆட்டமிழக்காது பெற்ற 161 ஓட்டங்களே இவர் குவித்த அதிகூடிய தனிநபர் ஓட்ட எண்ணிக்கை ஆகும்.

நடைபெறப் போகும் பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டமே இவரது இறுதி டெஸ்ட் ஆட்டமாகும். (இ-8-4)

### விருந்துபசாரம்

15 வயதுக்கு உட்பட்ட யாழ். மாவட்டக் கிரிக்கெட் அணி கடந்த மாதம் மட்டக்களப்பில் நடைபெற்ற போட்டி ஆட்டங்களில் அடைந்த மாபெரும் வெற்றியைப் பாராட்டும் முகமாக யாழ் மாவட்டப் பாடசாலை கிரிக்கெட் சங்கம் 15 வயதுக் கிரிக்கெட் அணியில் மாணவர்களை விளையாட ஊக்கமளித்த பாடசாலை அதிபர்களுக்கும் பொறுப்பாசிரியர்களுக்கும் அணி வீரர்களுக்கும் மதியபோசனவிருந்து ஒன்றை இன்று வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

இந்த 15 வயது யாழ். மாவட்ட அணி வீரர்கள் அனைவரையும் இன்று மதியம் 11-30 மணிக்கு பஸ்தியன் ஹோட்டலில் பயிற்சியாளர் வி. கே சண்முகலிங்கத்தைச் சந்திக்குமாறு யாழ் மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத் தலைவர் எஸ். இராசதுரை கேட்டுள்ளார். (இ-4-8)

### கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 1

அரியாலை மத்தி இளைஞர் கழகம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தும் கரப்பந்தாட்ட (செட்—அப்) சுற்றுப் போட்டியில் அரியாலை சிற்றம்பலம் ஆடுகளத்தில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி கே. கே. எஸ். விளையாட்டுக்கழக அணியுடன் மோதுகின்றது. (இ-4)

### இலக்கியப்போட்டி

சாவகச்சேரி, நவ. 1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் யுனெஸ்கோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலக்கியப்போட்டிகள் இன்று முதல் நடைபெறவுள்ளன.

சித்திரப்போட்டி இன்றும் கட்டுரைப்போட்டி நாளையும், கவிதைப்போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதியும் வலய அலுவலகத்தில் இடம்பெறும் [இ-3-133]

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இடைக்கால நிர்வாகசபை அமையும்?

## அரச உயர்மட்டத்தில் ஆராயப்படுகிறதாம்

கொழும்பு, நவ. 1

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபை அமைப்பது குறித்து அரசாங்க உயர்மட்டத்தில் தற்பொழுது தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பான அறிவித்தல் வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் ஈ பி.டி.பி. அமைப்பின் பிரதிநிதிகள் நடத்திய சந்திப்பின் போது இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாக வலியுறுத்தப்பட்டதாக தமிழ் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பில் ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையிலே ஈ.பி.டி.பி. அமைப்பு ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவை ஆதரிக்க முடிவு செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் தங்களுடன் கலந்தாலோசிக்கப்படாமல் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று ஏனைய தமிழ்க் கட்சிகள் தெரிவித்துள்ளன என்று கூறப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் இடைக்கால நிர்வாக சபை தேவையில்லை என்று தெரிவித்த இந்த தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதி தேர்தல்தொடர்பாக தமிழ்க்கட்சிகள் தற்பொழுது எடுத்துள்ள தீர்மானத்தை திசை திருப்பும் முயற்சியே இடைக்கால நிர்வாக சபை என்று சுட்டிக்காட்டி உள்ளன. (இ-5-21)

### 'சீடா' செயற்திட்ட கருத்தரங்கு

புன்னாலைக்கட்டுவன், நவ.1

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான 'சீடா' செயற்திட்டம் பற்றிய கருத்தரங்கு நாளை மறுதினம் புதன்கிழமை மேற்படி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மூன்றாம் தவணைப் பரீட்சை, மதிப்பீடு தொடர்பான விடயங்கள் அதிபர்களுடன் கலந்துரையாடப்படவுள்ளன என 'சீடா' செயற்திட்ட அதிகாரி இ. கயிலைநாதன் தெரிவித்தார். (க-133)

### மாணிக்க விழாவும் பரிசில் நாளும்

புன்னாலைக்கட்டுவன நவ. 1

கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணிக்க விழாவும் பரிசில் நாளும் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு பாடசாலை அரங்கில் பாடசாலை அதிபர் அ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராஜா முதன்மை விருந்தினராகவும் கோட்டக் கல்வி அதிகாரி அ. கயிலாயபிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (க-133)

### விசேட அடையாள அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 1

குருநகர் கிழக்கு (ஜே.70) கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான விசேட அடையான அட்டைகள் இன்று காலை 9—00 மணிக்கு [illegible] வைத்து வழங்கப் படுகின்றன. (இ-3)

### மில்லுக்கு கொடுத்த நெல்லில் கிடந்த தங்கச் சங்கிலி!

சண்டிலிப்பாய், நவ. 1

மில்லுக்கு கொடுக்கப்பட்ட நெல்லுக்குள் கிடந்த சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான 3 பவுண் நிறையுள்ள தங்கச் சங்கிலி ஒன்று மில் உரிமையாளரினால் கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் பண்டத்தரிப்பு செட்டிய குறுச்சிப் பகுதியில் இடம் பெற்றது.

இப்பகுதியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து நெல் குற்றுவதற்காக ஒரு தொகை நெல் மேற்படி மில்லுக்கு கொடுக்கப்பட்டது.

மில் உரிமையாளர் நெல்லை குற்றிக் கொடுத்த பின்பு அன்று மாலையில் மில் மெஷினை துப்புரவு செய்த போது அதற்குள் தங்கச் சங்கிலி கிடந்ததைக் கண்டுபிடித்தார்.

அவர் அதை எடுத்து உரியவரிடம் ஒப்படைத்தார். (இ-135)

### வர்த்தகர் கைது குறித்து படைத் தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 1

இணுவில் கிழக்கைச் சேர்ந்த வீ. கந்தசாமி என்பவர் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு 13 லட்சம் ரூபா வழங்கியதன் காரணமாக இம்மாதம் 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார் என பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்குவது அப்பாவி மக்களின் வாழ்க்கையைச் சீர்குலைப்பதோடு சமாதானத்துக்கும் அச்சுறுத்தலாக அமைவதாகவும்—

இவ்வாறு நிதி வழங்கும் நபர்களின் உடமைகள் சொத்துக்கள் சட்டத்துக்கமைய அரச உடமையாக்கப்படும் என்றும் — அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

### பல்கலை..,

(முதலாம் பக்கத் தொடர்)

டுள்ளன என்றும்—

மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது

குறித்த மாணவனின் விடுதலையை விரைவுபடுத்துமாறு கோரி சட்ட ரீதியான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையடுத்து பகிஷ்கரிப்புப் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்யப் பட்டுள்ளது என்று ஒன்றியம் அறிவித்துள்ளது (இ-3-7)

### கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 1

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும், அவர்களுக்கு கல்வி போதித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் விழா இன்று வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. (இ-3)

### புளொட்,,

(முதலாம் பக்கத் தொடர்)

தாம் கைது செய்யவில்லை என அவர்கள் கூறியுள்ளனர் என்றும் — அவரது மனைவி தகவல் கூறியுள்ளார்.

கைதான ஜெகன் எங்கு வைக்கப்பட்டுள்ளார் என்பது குறித்தோ — அவரைக் கைது செய்தது யார் என்பது குறித்தோ — நேற்றிரவு வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (இ-3-164)

# 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு நியூஸிலாந்து 211 ஓட்டங்கள்

அகமதாபாத், நவ. 1

இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் மூன்றாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் நியூஸிலாந்து அணி தனது முதலாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றைய ஆட்ட ஆரம்பத்தில் ஒரு விக்கெட் இழப்புக்கு 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த நியூஸிலாந்து அணி ஆரம்பத்தில் இந்திய அணியின் பந்து வீச்சில் ஆட்டங்கண்டாலும் பின்னர் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டது.

அணிக்காக ஸ்ரீபன் பிளமிங் 48 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார். நதான் ஆஸ்லே 68 ஓட்டங்களுடனும் க்றிஸ்கெய்ஸ் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது உள்ளனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 583 ஓட்டங்களைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த டெஸ்ட்டின் நான்காம் நாள் ஆட்டம் இன்று தொடரும். (இ-4)

## வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி:

# கால் இறுதி ஆட்டத்தில் கொழும்பு அணி வெற்றி

கொழும்பு, நவ. 1

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள விளையாட்டு அமைச்சு மைதானத்தில் தற்போது நடைபெற்று வரும் 18 முதல் 22 வயதுக்கு உட்பட்ட யுவதிகளுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று யாழ். மாவட்ட அணி கால் இறுதி ஆட்டத்தில் கொழும்பு மாவட்ட அணியிடம் தோற்றது.

''சிறப்பாகவும் தமது முழுத்திறனையும் வெளிக்காட்டிச் சிறப்பாக விளையாடியபோதும் அனுபவமில்லாத விளையாட்டின் மூலம் 29—19 என்னும் புள்ளிகளின் அடிப்படையில் தோற்றுப் போனது'' என யாழ் மாவட்ட அணியின் வலைப்பந்தாட்டப் பயிற்சியாளர் தெரிவித்தார். (இ-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எமது புதிய
வீடியோ வெளியீடு!
சூப்பர் ஸ்ரார் ரஜனியுடன்
அனைத்து தென்னிந்திய
திரைப்படக் கலைஞர்கள்
பங்குபற்றும்
"படையப்பா"
வெள்ளி விழா
கலை நிகழ்ச்சி

**வீடியோ எக்கணமி மியூசிக் கோணர்**

பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(70583)


## சிறைச்சாலை...

(முதலாம் பக்கத் தொடர்)

களுடன் சேர்ந்து) கூரைமீது ஏறிஉண்ணாவிரதப்போராட்டம் மேற்கொண்ட போது தம்மை விசாரணை செய்வதற்குநடவடிக்கைஎடுப்பதாக அதிகாரிகள் கூறியதாகவும்—.

ஆனால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கரவெட்டி கண்பொல்லவீதியைச்சேர்ந்த இளைஞன் ஒருவரின் தலை யாழ். நகரப் பகுதியில் வைக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் இந்த நால்வரும் நெல்லியடிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## தொண்டாவின்..

[முதலாம் பக்கத் தொடர்]

செலுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்கள் வேலைகளுக்குச் செல்லாது துக்கம் அனுஷ்டித்தனர், வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

கொட்டகலவில் உள்ள இ. தொ. கா. அலுவலகத்துக்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

தொண்டமானின் மரணம் குறித்து தென்னிலங்கை அரசியல்வாதிகளும், இந்திய தலைவர்களும் அனுதாபம் தெரிவித்து அறிக்கைகளை விடுத்துள்ளனர்.

தொண்டாவின் இறுதிக் கிரியைகள் இடம்பெறும் எதிர்வரும் வியாழக்கிழமை தேசிய துக்கதினம் பிரகடனம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-க-3-7)

## குற்றவாளிகள்...

[முதலாம் பக்கத் தொடர்]

அணியும் இதே கோரிக்கையை விடுத்துள்ளது

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் வெள்ளியன்று உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

(இ-3-7-21)

## சந்திரிகாவுக்கு ஆதரவு

கொழும்பு, நவ. 1

டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவளிக்கப் போவதாக இலங்கை இந்திய வம்சாவளி மக்கள் பேரவை அறிவித்துள்ளது.

## அம்பகாமம் ...

(முதலாம் பக்கத் தொடர்)

உயிரிழந்ததாகவும் – பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தச் சண்டையில் ஓர் அதிகாரி உட்பட 11 படையினர் உயிரிழந்தனர் என்றும் 74 படையினர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் படை அதிகாரிகள் தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸிகள் கூறின.

எனினும் இந்தச் சண்டையில் 22 படையினர் உயிரிழந்தனர் என்றும் 187 படையினர் காயம் அடைந்தனர் என்றும் வன்னிப் படைத் தரப்பு தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் தரப்பில் 98 பேர் உயிரிழந்தனர் என்றும் அந்தத் தரப்பு மேலும் கூறியது.

ஆனால் புலிகள் தரப்பு தகவல் ஏதும் நேற்றிரவு வரை வெளியாகவில்லை.

(இ-க-3-7-21-164)


எமது
இன்றைய வெளியீடு
'படையப்பா'வின்
175 ஆவது நாளை
முன்னிட்ட
ரஜனியின்
★ வெள்ளி விழா
நிகழ்ச்சி

குறிப்பு:-
எம்மிடம் வீடியோ CD களும் ஐங்கரன் பிரதிகளும் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

**நரேன்**
**வீடியோ சென்ரர்**
140, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/9616)



கடந்த 28 வருடங்களாக தரமான மதுபானங்களை
நிதானவிலையில் மதுப்பிரியர்களுக்கு வழங்கி வரும்

**வரமாஸ்**

ஸ்தாபனத்தார்
பெருமையுடன் தருவதுதான்

**றொக்லண்ட்**

**மதுபான உற்பத்திப் பொருள்கள்.**
கடந்த 7 சகாப்தங்களாக மதுபான உற்பத்தியில்
முன்னணியில் திகழும்
**றொக்லண்ட் ஸ்தாபனத்தார்**
வழங்கும்

- றொக்லண்ட் சிலோன் அரக்
- றொக்லண்ட் ஒல்ட் அரக்
- றொக்லண்ட் ஒல்ட் அரக் (EXTRA STRONG)
- திரீஸ்ரார் அதிசக்தி சாராயம்
- ஹனப்பியர் பிரண்டி
- றொக்லண்ட் லெமன் ஜின்
- றொக்லண்ட் ட்ரை ஜின்

இன்னும் பல
கொழும்பு விலையில் இருந்து ரூபா 30 மட்டுமே கூடுதலாக
தீபாவளிக்கு உங்களை கிக்கென
வைக்கப்போகின்றது '**றொக்லண்ட்**'
றொக்லண்ட் மதுபானவகைகளை யாழ். நகரில் தருவித்து
விநியோகிப்போர்:

**வரமாஸ்**
121/2, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி – 2989
மதியுள்ளவர்கள் மகிழ்ப்பத்துடன் தெரிவு செய்வது
"றொக்லண்ட்"

எண்ணம் வடிவம், அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்
(சி/9536)



எமது
புதிய வெளியீடு!

ரஜனியின்
25 ஆவது ஆண்டும்
"படையப்பா"
வெள்ளி விழாவும்

வீடியோ CD வெளியீடுகள்!

★ முள்ளும் மலரும்
★ பணமா பாசமா
★ பாரத விலாஸ்
★ மாண்புமிகு மாணவன்
★ ரோஜாவைக் கிள்ளாதே
★ கடல் மீன்கள்
★ என் பொம்முக்குட்டி அம்மாவுக்கு
★ துணைவன்
★ சக்தி லீலை
★ காரைக்கால் அம்மையார்
★ மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி
★ ராஜரிஷி

ஐங்கரன் வெளியீடுகள்!

★ ஜெயம்
★ காதலர் தினம்
★ சூரியோதயம்
★ சிங்க நடை

ஒறிஜினல் வெளியீடுகள்!

★ மறக்க முடியுமா
★ தங்கமலை இரகசியம்
★ பந்த பாசம்

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/9617)



உ
ஸ்ரீராமஜெயம்

**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்**

மாயவன் அடியார்களே! ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி பெயரில் சிலர் வலிகாமம், சாவகச்சேரிப் பகுதிகளில் பொய்யான தகவல் பலவும் கூறியும் பொய்யான வதந்திகளைப் பரப்பியும் மக்கள் மனத்தைக் கவர்ந்து மக்களிடம் பணம், பொருள் சேகரிப்பதாக அறிந்து மனம் வருந்துகிறோம். இக்கோயில் தரும பரிபாலன சபை எவரையும் எக்காரணம் கொண்டும் பணம் ஊர் ஊராய்ச்சேகரிக்க அனுமதிக்கவில்லை; அனுமதித்ததும் இல்லை என்பதனை அறியத் தருகிறோம்.

நீங்கள் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமிக்கு பணம், பொருள் கொடுக்க விரும்பின் கோயிலில் வந்து பற்றுச் சீட்டைப் பெற்று அதனைக்கொடுங்கள் நீங்கள் வருவது கஷ்டமாயின் கோயிலுக்கு வருபவர்களிடம் கொடுத்து அவர்களைப்பற்றுச்சீட்டைப் பெற்றுவருமாறு கூறி அப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மீண்டும் தவறான வழியில் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி பெயர் சொல்லிப் பணம் சேகரிப்பவர்களிடமும் பொய் வதந்திகள் பரப்புபவர்களிடமும் ஏமாறாதீர்கள் எனப்பணிவாக வேண்டுகின்றோம்.

ச. தேவதாசன்
தரும பரிபாலன சபை சார்பாக,
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்.
[70509]



**காவேரியில்...**
**தீபாவளியை முன்னிட்டு**
**இன்றும்**
**மாபெரும் மலிவு விற்பனை**

**நீங்கள் விருப்புடன் தெரிவு செய்திடும்**
▶ சாறிகள் ▶ ஸ்கேட் அன் பிளவ்ஸ்
▶ பஞ்சாபி ▶ சேட் ▶ சூட்டிங்
▶ T சேட் ▶ பல் வகைத் துணி வகைகள்
**அனைத்திற்கும் மின்னல் வேக விலை குறைப்பு**

**காவேரி சில்க்ஸ்**
48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.



**நவீன சந்தை உள்ளே...**
**ரம்மியாஸில்**
**"தீபாவளி"க் கால விற்பனை**

**உங்கள் தெரிவுக்கென**
◆ சேட் ◆ T சேட் ◆ றெடிமேட் ரவுசர்
◆ சூட்டிங் ◆ பெனியன், சாரங்கள்
◆ பல்வகை சாறி வகைகள் ◆ ஸ்கேட் அன் பிளவ்ஸ்
◆ பஞ்சாபி ▶ இன்னும் பற்பல...

**ரம்மியாஸ் சில்க்ஸ்** (சி/9498)
181, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள [illegible] 01 11 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org